Registered as a NewsPaper

விலை ரூபா-8.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -16 திருவள்ளுவர் ஆண்டு- 2036 மாசி-11 23-02-2005 புதன்கிழமை ஓசை 05



கணேசா நகையகம்

தங்கநகை உலகில் தமக்கென தனியிடம் பதித்தவர்கள்

இல:123. பஜார் வீதி, வவுனியா. T.P.-024-2222464

இல:194. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். T.P.-021-2225987

(சி-11251)

# படுகொலைகளைத் தடுக்க படையினரால் முடியாவிடின்

# வெளியேறி மக்களை நிம்மதியாக வாழவிட வேண்டும்

## யுத்தநிறுத்தத்திற்குப் படுகொலைகள் சவால் விடுகின்றன—சு.ப.தமிழ்ச்செல்வன்



**படைத்தரப்பினால் படுகொலைகளை, ஆயுதக்குழுக்களைக் கட்டுப்படுத்த முடியாது விட்டால் எங்கள் பகுதிகளிலிருந்து படையினர் வெளியேறி எமது மக்களை நிம்மதியாக வாழவிட வேண்டும். யுத்தநிறுத்தத்திற்குச் சவாலாக படுகொலைகள் இடம்பெறுகின்றன. அமைதிச் சூழலைக் குழப்பும் நோக்கத்தோடுதான் அரச படைகள் செயற்படுகின்றனவோ என அனைத்து மக்களையும் எங்களையும் சிந்திக்கத் தூண்டியுள்ளன என அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள் தெரிவித்தார்.**

நேற்று நோர்வே விசேட தூதுவர் எரிக் சூல்ஹெய்முடனான சந்திபபின் பின்னர் செய்தியாளர் சந்திப் பிலேயே அவர் இவ்வாறு தெரிவித் தார்.

அவர் வழங்கிய செவ்வியின் விபரம்பின்வருமாறு.

**கேள்வி:- இன்றைய சந்திப்பின் முக்கிய விடயம் என்ன?**

பதில்:- தற்போதுள்ள நிலைப்பாடுகள் தொடர்பாக கலந்துரையாடியிருக்கின்றோம். இதில் முக்கியமாக எங்களுடைய பொறுப்பாளர்கள், போராளிகள் கொல்லப்படும் நிலமை, இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் ஏற்பட்டிருக்கின்ற

(12 ஆம் பக்கம் பார்க்க)

## சுனாமி நிவாரணத்திற்கு பொதுக்கட்டமைப்பு உருவாக்குவது குறித்தும் ஆராய்ந்தோம்

### அரசியல்துறைப் பொறுப்பாளருடனான சந்திப்பின்பின் எரிக்சூல்ஹெய்ம்

இன்றைய சந்திப்பில் போர் நிறுத்த உடன்பாடு தொடர்பாகவும், சுனாமி நிவாரணத்திற்கான பொதுவான கட்டமைப்பை உருவாக்குவது தொடர்பாகவும் ஆராய்ந்தோம். என எரிக்சூல்ஹெய்ம் தெரிவித்தார். இரு பகுதியினாலும் போர் நிறுத்த உடன்படிக்கை தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படுகிறது. போர் நிறுத்த உடன்படிக்கை கைச்சாத்தான மூன்று வருடத்திலும் கிட்டத்தட்ட 300 பேர் கொல்லப்பட்டுள்ளனர். இது இருபது வருட போர்க்காலத்தில் சில கிழமைகளில் கொல்லப்பட்ட எண்ணிக்கையிலும் குறைவானதே. சுனாமி நிவாரணத்திற்கான பொதுக் கட்டமைப்பை உருவாக்கு வதற்கு தேவையான கலந்துரை யாடல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தொடர்ந்தும் பேச்சுக் களை நடத்த இருக்கின்றோம். ஒரு பொறிமுறைக்கட்டமைப்பை உருவாக்குவதற்கு இரு தரப்பி

(11 ஆம் பக்கம் பார்க்க)

## வடமராட்சி கிழக்கிற்கு எரிக்சூல் ஹெய்ம் விஜயம்

### சுனாமியால் பாதிக்கப்பட்ட இடங்களைப் பார்வையிட்டார்

சுனாமி பேரலை அனர்த்தத்தினால் வடமராட்சி கிழக்கில் பாதிக்கப்பட்ட இடங்களை நோர்வேயின் விசேட தூதுவர் எரிக்சூல்ஹெய்ம் அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டுள்ளார்.

நேற்று நண்பகல் ஒருமணியளவில் கிளிநொச்சியிலிருந்து புறப்பட்டு மருதங்கேணியிலுள்ள சுனாமிப்பேரலை அனர்த்த நிவாரண, புனர்நிர்மாணப் பணிகளின் ஒருங்கிணைப்புச் செயலகத்திற்குச் சென்ற அவர், சிறு கலந்துரையாடல் ஒன்றிலும்

(11 ஆம் பக்கம் பார்க்க)



பாதிக்கப்பட்ட மக்கள் மீள்குடியமர அமைக்கப்பட்டகுடிசைகளை எரிக்சூல் ஹெய்ம் பார்வையிடுகிறார்.

## இன்னுமொரு யுத்தம் வருமானால் நாம் அனைவரும் அழிக்கப்பட்டு விடுவோம்

### -எதிர்க் கட்சித்தலைவர் ரணில் தெரிவிப்பு

சில கட்சிகள் நாடு மீண்டும் யுத்தத்திற்குத் திரும்புவதை விரும்புகின்றன. ஆனால் மற்றொரு யுத்தத்தை எதிர்கொள்ளும் சக்தி இந்தத் தேசத்திற்கு இல்லை. அப்படி ஒரு யுத்தம் வருமேயானால் நாம் அனைவரும் அழிக்கப்படுவோம் என எதிர்க்கட்சித்தலைவர் தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் சிறிலங்கா அரசிற்கும் இடையே கைச்சாத்திடப்பட்டபோர் நிறுத்த உடன்படிக்கை மூன்றாண்டுகள் பூர்த்தியான நிலையில் அன்றைய பிரதமரும் தற்போது எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரம சிங்க இன்றைய நிலைமை பற்றிக் கருத்துத் தெரிவிக்கும் முகமாக வெளியிட்ட அறிக்கையிலேயே இவ்வாறு கூறியுள்ளார். அவர் இது தொடர்பாக வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கும் போது;

மூன்றாண்டுகளுக்கு முன்பு விடுதலைப்புலிகளுடன் ஓர் ஒப்பந்தத்தை ஏற்படுத்திக் கொண்டு அதற்கு முன் நிலவிவந்த மோதல் நிலை யையும் பகைமையையும் நாம் ஒரு முடிவிற்குள் கொண்டு வந்திருந்தோம்.

சனவரி இரண்டாயிரத்து நான்கில் சமாதானப் பேச்சு வார்த்தைகளை தொடங்குவது என்பது

(11 ஆம் பக்கம் பார்க்க)

## ஈராக்கில் இலங்கையர்பலி

ஈராக் தீவிரவாதிகளின் துப்பாக்கிப் பிரயோகத்தில் இலங்கையரான ரொகான் பெர்னாண்டோ என்ற வாகனச்சாரதி கொல்லப்பட்டுள்ளார்.

இலங்கையிலிருந்து குவைற்றிற்கு வேலை வாய்ப்பின் நிமித்தம் சென்றிருந்த இவர் தான் பணியாற்றிய நிறுவனத்தின் வற்புறுத் தல் காரணமாக ஈராக்கிற்கு தொழிலின் நிமித்தம் சென்ற சமயம்

(11 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டு.இல் சுனாமியால் பாதிப்படைந்த மக்களுக்கு தற்காலிக குடியிருப்புகள் அமைத்தல் துரிதம்

### த.பு கழகத்திற்கு சுவிஸ் உறவுகள் நேரில் நின்று உதவி

மட்டக்களப்பு மாவட்டத்தில் சுனாமிப்பேரலை அனர்த்தம் காரணமாகத் தங்களது வாழ்விடங்களையும் பொருளாதார வளங்களையும் இழந்தநிலையில் நலன்புரிநிலையங்களில் வாழ்ந்து வரும் மக்களுக்கு தமிழர் புனர்வாழ்வுக் கழகம் தனது அளப்பரிய மனிதாபிமானச் சேவைகளைப் புரிந்துவருகின்றது. இதன் தொடர் நடவடிக்கையாக இரண்டாம் கட்டமாக தற்காலிக வீடுகளைக் கொண்ட குடியிருப்புக்களை அமைக்கும் வேலைத்திட்டச் செயற்பாடுகளை முன்னெடுத்து மக்களைக் குடியமர்த்தி வருகின்றது.

இந்த வேலைத்திட்டச் செயற்பாடுகளுக்கு வெளிநாடுகளில் புலம்பெயர்ந்து வாழ்ந்துவருகின்ற எமது தமிழ் உறவுகளின் உதவிக்கரங்கள் தொடர்ந்தும் பக்கபலமாக இருந்துவருகின்றன. அந்த வகையில் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பாதிக்கப்

(11 ஆம் பக்கம் பார்க்க)

## வீரச்சாவு

29.09.1998 அன்று மாங்குளம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடி மோதலின் போது போராளி ஒருவர் வீரச்சாவடைந்துள்ளார்.

லெப்.மஞ்சரி (கந்தசாமி சசிதேவி/சுதா,வி.என்.கமம் வெலிக்கண்டல் கண்டாவளை) என்னும் போராளியே வீரச்சாவடைந்தவராவார். இவருக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.

# அரசசேவை பட்டதாரிப் பயிலுநர்களுக்கு இருப்பிட வசதிகள் எதுவும் இல்லை!

(அலுவலகசெய்தியாளர்)

சிறிலங்கா அரசினால் அண்மையில்அரசசேவையில் இணைத்துக்கொள்ளப் பெற்ற பயிலுநர் பட்டதாரிகள் பலர் பணி புரியும் திணைக்களங்களினால் இருப்பிட வசதிகள் மேற்கொள்ளப்படாத நிலையில் பெரும் இன்னல்களுக்கு மத்தியில் கடமையில் ஈடுபடவேண்டிய நிலைக்கு ஆளாகியுள்ளனர்.

பல மாவட்டங்களைச்சேர்ந்த பயிலுநர் பட்டதாரிகள் அரச சேவையில்இணைக்கப் பட்டு நியமனங்கள் வழங்கப்பெற்றுள்ள பொழுதிலும் சம்பந்தப்பட்ட திணைக்களங்கள் மேற்படி ஊழியர்களுக்கு தங்குமிட வசதிகள் ஏற்படுத்திக்கொடுக்காமையின் காரணமாக கடமையின் நிமித்தம் சொந்தமாவட்டங்களிலிருந்து வேறு மாவட்டங்களிலுள்ள அரச திணைக்களில் நியமனம் கிடைக்கப் பெற்றபயிலுநர் பட்டதாரிகளே மேற்படி இன்னல்களை சந்திக்க நேரிட்டுள்ளது.

குறிப்பாக பெண்பயிலுனர் பட்டதாரிகளே இருப்பிட வசதிகளற்ற நிலையில் பலத்த சிரமங்களை எதிர்நோக்கவேண்டிய நிலைக்குஆளாகியுள்ளனர்.(சோ)

# வீடமைப்புக்கடனை மீளளிக்க சலுகை வழங்கப்பட்டுள்ளது

(முல்லைத்தீவு)

தேசிய வீடமைப்பு அதிகார சபை ஊடாக 2000ஆண்டிற்கு முன்னர் வீடமைப்புக்கடனை பெற்றுக் கொண்டவர்களில்இது வரை செலுத்தாதவர்களுக்கு 25 வீத சலுகை வழங்கப்பட்டுள்ளதாக மாவட்ட வீடமைப்பு அதிகார சபை முகாமையாளர் ச. கோவிந்தராசன் தெரிவித்துள்ளார்.

இதன் மேலதிக விபரங்களை மாவட்டதேசிய வீடமைப்பு அதிகாரசபை முகாமையாளர், பாலிநகர்,வவுனிக்குளம் என்ற முகவரியில் நேரடியாகவோ அல்லது உதவி அரசாங்க அதிபரின் அலுவலகங்களிலுள்ள வீடமைப்பு உத்தியோகத்தர் ஊடாகவோ தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (20)

# தேசியத் திரைப்படக் கூட்டுத்தாபன நேர்முகப் பரீட்சைக்கு அழைப்பு

இலங்கைத்தேசியத் திரைப்படக் கூட்டுத்தாபனத் தமிழ்ப் பிரிவின் கலைக்குழுவில் பங்குபற்ற விண்ணப்பித்தவர்களுக்கான நேர்முகப் பரீட்சை பெப்ரவரி 26,27 ஆகிய திகதிகளில் காலை 9.00 மணிக்கு 224, பௌத்தாலோகமாவத்தை, கொழும்பு-07 இல் அமைந்துள்ள திரைப்படக் கூட்டுத்தாபனத் தமிழ்ப் பிரிவுக் காரியாலயத்திலும், மார்ச் 05,06 ஆகிய திகதிகளில் காலை 9.00 மணிக்கு யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியிலும் நடைபெறவுள்ளது.

இதற்கு விண்ணபிக்கத் தவறிய நடனம், சண்டை,இசை (பாடல்/வாத்திய)க் கலைஞர்கள் நேர்முகப் பரீட்சை நடைபெறும் இடங்களில் அத்தினங்களில் தத்தமது பெயரினைப் பதிவு செய்து நேர்முகப் பரீட்சைக்கு நேரடியாகத் தோற்றலாமென இலங்கை தேசியத் திரைப்படக் கூட்டுத்தாபனப் பணிப்பாளர் க.தேவதாசன் அறிவித்துள்ளார்.

# கல்விளான் பாடசாலையில் நாளை வீரமுரசு நிகழ்வு

(மல்லாவி)

துணுக்காய் பிரதேச மாதாந்த வீரமுரசு நிகழ்வு கல்விளான் பாடசாலை மைதானத்தில் நாளை இரவு 7.00 மணிக்கு இடம் பெறவுள்ளது.

துணுக்காய்கோட்ட தேசிய எழுச்சிப்பேரவையினர் இதற்கான ஏற்பாட்டினைச் செய்துள்ளனர்.

சிறப்புரைகள் மற்றும் கலை நிகழ்வுகள் என்பனவும் இடம் பெறும் (24)

# 01ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு
24 – 11 – 1943

இறப்பு
05 – 03 – 2004

அமரர்

## திருமதி சிவயோகமலர் கதிரேசு

பருத்தித்துறையில் பிறந்த மலர்
பளை தன்னில் மணமுடித்தே
பக்குவமாய் கிளி நகர்தனில்
பாங்குடனே வாழ்ந்திருந்தோம்
பூவுலக. தரிசனம் தான்
பூவிற்கு முடிந்ததனால்
மலர்வாடிப் போனதல்லோ
மனங்கள் மறவா ஓராண்டானதல்லோ

**அன்னாரின் இல்லத்தில் 23.02.2005 அன்று இடம்பெறும் பிராத்துனையிலும் மதியபோசனத்திலும் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்மாசாந்திக்காகப் பிரார்த்திக்குமாறு உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.**

*விசேடமாக டாக்டர் பொன்னம்பலம் மருத்துவமனை பணியாளர்களையும் இந்நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு வேண்டுகின்றோம்.*

தகவல்:-
கணவர் பொ.கதிரேசு,
மகன் க.கஜேந்திரகுமார் (லண்டன்),
"அமுதசுரபி",
வில்சன் வீதி, இரணைமடு,
கிளிநொச்சி. (5741)

இவரின் பிரிவால்
துயருறும்
குடும்பத்தினர்

# கலாசார விழா

வலிகாமம் மேற்கு கலாசாரப் பேரவையின் கலாசார விழா இன்று புதன் கிழமை பிற்பகல் 3.45 மணியளவில் சங்கானை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இதில் பல்வேறு கலாசார நிகழ்வுகளும் இடம்பெறும். (33)

# மெய்வன்மைப் போட்டி

யாழ்.சென்மேரிஸ் வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுனர் போட்டி எதிர் வரும் 25 ஆம் திகதி பிற்பகல் 2 மணியளவில் வித்தியாலய மைதானத்தில் இடம்பெறவுள்ளது. இந்நிகழ்விற்கு வித்தியாலய அதிபர்தலைமை தாங்குவார். (33)


## வரிவிளம்பரம்

### வேலையாள் தேவை

அரசி அரைக்கும் ஆலைக்கு நன்கு அனுபவமுள்ள வேலையாள் தேவை அனுபவத்தின் அடிப்படையில் சம்பளம் பேசித் தீர்க்கப்படும், விரும்பியவர்கள் நேரில் சந்திக்கவும். அரசி அரைக்கும் ஆலை மாத்தளன் வீதி புதுக்குடியிருப்பு. (5739)

### விற்பனையாகின்றது

வேலுப்பிள்ளை அன்பழகன் ஆசிரியர் அவர்களது தரம் 5 புலமைப்பரீட்சை மாணவர்களுக்கானபரீட்சை மாதிரி வினாத் தாள்கள் (15 நாட்களுக்குள் 1 வினாத்தாள்) அத்துடன் கட்டுரைப் பொத்தகம், பரீட்சை வழிகாட்டி 2004 ஆம் வருட புதிய வெளியீடு பாடசாலைகளுக்கு சிறப்புக்கழிவு கிடைக்குமிடம் வன்னியில் எமது விற்பனை முகவர் பிள்ளையார் பொத்தகசாலை கிளிநொச்சி. (சி.11415)


# வவுனியா மாவட்ட ஆசிரியர்களின் உரிமை தொடர்பான கலந்துரையாடல்

(வவுனியா செய்தியாளர்)

இலங்கை ஆசிரியர் சங்கத்தினால் வவுனியா மாவட்ட ஆசிரியர்களின் உரிமை தொடர்பான கலந்துரையாடல் ஒன்று இன்று காலை 9.00 மணிக்கு நடத்தப்படவுள்ளது.

இறம்பைக்குளம் புனித அந்தோனியார் ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ள இக்கலந்துரையாடல் தொடர்பாக இலங்கை ஆசிரியர் சங்கம் அறிக்கை ஒன்றிணையும் வெளியிட்டுள்ளது. (20)


## பணிநிலை வேண்டுகை

வன்னிப்பகுதியில் இயங்கும் முன்னணி உணவகம் ஒன்றிற்கு கீழ்வரும் பணிநிலைகளுக்கு வேண்டுகைகள் கோரப்படுகின்றன.

01. வரவேற்பாளர் - ஆண் :-
சம்பளம் 7,500.00இற்கு மேல் தகைமைக்கேற்றவாறு வழங்கப்படும்.

02. பரிமாறுநர் - ஆண் :-
சம்பளம் 6,000.00இற்கு மேல் தகைமைக்கேற்றவாறு வழங்கப்படும்.

* இரு பணிநிலைக்கும் உணவு, தங்குமிடவசதி இலவசமாக வழங்கப்படும்
* தகைமை :-

✦ பணிநிலை - 01

1. தமிழ்,ஆங்கிலம், சிங்களம் ஆகிய மொழிகளில் நன்றாக உரையாடத் தெரிந்தவராக இருத்தல்
2. வாணிபம் பற்றிய வரவேற்பாளர் பயிற்சிநெறியில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

✦ பணிநிலை- 02

1. பரிமாறுநர் பணியில் முன்னனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
2. மூன்று ஆண்டுகள் தொடர்ந்து பணிபுரியும் பணியாளருக்கு மூன்றாண்டு நிறைவுற்றதும் இலவசமாக ஓட்டுநர் பயிற்சி வழங்கி ஓட்டுனர் பணிக்கு அமர்த்தப்படுவார்.

○ அகவையெல்லை :-
*வரவேற்பாளர் :- 55 அகவைக்குட்பட்டவர்.*
*பரிமாறுநர் :- 35 அகவைக்குட்பட்டவர்.*

○ பணிநிலைக்கான நேர்முகத்தேர்வு 05.03.05 ஆம் நாள் கிளிநொச்சி அம்மன் கட்டடப்பொருள் வாணிபத்தில் நடைபெறவுள்ளது.

○ தகைமையும், ஆர்வமும், மனவிருப்பும் உடையவர்கள் தன்வரலாறு (சுயவிபரம்) அடங்கிய படிவத்துடன் நேரில் சமுகம் தரவும். (5745)

## பணிநிலை வெற்றிடம் (தேவை)

**01.தொழில்நுட்ப உத்தியோகத்தர். (கட்டடம்)**
தகுந்த கல்வித்தகைமையுடன்10 வருட சேவை அனுபவம்.

**02.வேலை மேற்பார்வையாளர்-**
பதினைந்து வருட அனுபவம்.

**03.எழுது வினைஞர்:-**
இரண்டு வருட முன் அனுபவம்.
(க.பொ.த உயர்தரம் சித்தி)

**04. உழுவு இயந்திர சாரதி-**
(சாரதி அனுமதிப்பத்திரம்,நற்சான்றிதழ் பத்திரம்) பத்துவருட அனுபவம்.

முல்லைத்தீவு வைத்தியசாலை கட்டட வேலைத் தளத்திற்கு மேற்குறிப்பிட்ட பதவிகளிற்கு இணைய விரும்புவோர், கீழ் வரும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

ஆண், பெண் இருபாலரும் விண்ணப்பிக்கலாம்.

*தொடர்புகொள்ள வேண்டிய முகவரி*
*யூரோவில்,*
*வெற்றிமனைக் கட்டடப்பகுதி,*
*ஸ்கந்தபுரவீதி,*
*சேவியர்கடைச்சந்தி,*
*ஜெயந்திநகர்,*
*கிளிநொச்சி.*
(5744)

# ஈரானில் நேற்று பூமியதிர்ச்சி

# 500 பேர் பலி; பல நூறு வீடுகள் தரைமட்டம்

(தெஹ்ரான்)

**ஈரானின் தென்கிழக்குப் பகுதியில் நேற்றுக்காலை இடம் பெற்ற பூமி அதிர்ச்சியினால் ஐந்நூறிற்குமதிகமானோர் உயிரிழந் துள்ளதுடன் ஐயாயிரத்திற்குமதிகமானோர் காயமடைந் துள்ளனர். பலநூறு வீடுகள் தரைமட்டமாகியுள்ளன.**



6.4 ரிச்டர் அளவில் இந்தப் பூமியதிர்ச்சி பதிவாகியுள்ளதாக தெஹ்ரான் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தெஹ்ரானில் இருந்து 440 மைல் தொலைவிலுள்ள சராண்ட பகுதியி லுள்ள ஆறு கிராமங்கள் இப்பூமியதிர்ச்சியினால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இந்தப் பகுதியில் உள்ள கட்டடங்களில் 70 வீதமானவை இடிந்து தரைமட்டமாகியுள்ளன. 500இற்கு மேற்பட்டவர்கள் இதில் பலியாகியுள்ளனர். 5000 பேர் காயமடைந்தனர்.பல கிராமங்கள்அடியோடு அழிந்து விட்டன.

இது பற்றி ஈரான் தொலைக் காட்சி கூறும் ,போது இந்தப் பூகம்பத்தால் அதிகளவு சேதம் ஏற்பட்டுள்ளது. மீட்பு படையினர் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவித்துள்ளது.

கடந்த 2003 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் தென்கிழக்குப் பகுதியில் உள்ள பாம் நகரில் ஏற்பட்ட பூகம்பத்தில் 26 ஆயிரம் பேர் பலியானார்கள். அப்போது ஏற்பட்ட பூகம்பம் 6.6 ரிச்டர் அளவாகப் பதிவானது குறிப்பிடத்தக்கது.

கடந்த ஒக்டோபர் மாதம் ஈரானின் வடகிழக்குப் பகுதியில் ஏற்பட்ட பூகம்பத்தில் 12 பேர் பலியானதும் தெரிந்ததே.




சிரியாவை வெளியேற்றக் கோரும் கோசங்களுடன் லெபனானின் தலைநகர் பெய்ரூட்டில் நடந்த எதிர்ப்பு போராட்டம்.

## போர்த்துக்கல் பாராளுமன்றத் தேர்தல்

## சோசலிசக் கட்சி அமோக வெற்றி

(லிஸ்பன்)

போர்த்துக்கல் பாராளுமன்ற தேர்தலில் சோசலிசக் கட்சி அமோக வெற்றி பெற்றது. ஐரோப்பாக் கண்டத்தின் மேற்குப் பகுதியிலுள்ள போர்த்துக்கல் ஒரு கோடி மக்கள் தொகை கொண்ட சிறிய நாடு. 1974 இல் அங்கு ஏற்பட்ட புரட்சி மூலம் சர்வாதிகார ஆட்சி ஒழிக்கப் பட்டது. சனநாயகம் மலர்ந்தது. தற்போது கடும் பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கின்றது. அங்கு. வலது சாரிக் கூட்டணியைச் சேர்ந்த பெட்டோ சாண்டனா லோபஸ் பிரதமராக இருந்தார். கடந்த டிசம்பரில் அதிபர் ஜோர்ஜ் சம்பயோ பாராளுமன்றத்தைக் கலைத்து புதிய தேர்தலுக்கு உத்தரவிட்டார்.

தற்போது நடந்து முடிந்த தேர்தலில் ஜோஸ் சாக்ரேட்ஸ் தலைமையி லான சோசலிசக் கட்சி அமோக வெற்றி பெற்றுள்ளது. இது நிலையான அரசிற்கு வழிவகுக்கு மென பொது மக்கள் கருத்துத் தெரிவித்தனர். மொத்தமுள்ள 230 இடங்களில் சோசலிசக் கட்சிக்கு 119 இடங்கள் கிடைத்தன. சமூக சனநாயகக் கட்சிக்கு 73 இடங்கள் கிடைத்தன. கடந்த மூன்று ஆண்டுகளில் நான்காவது முறையாக இந்தத் தேர்தல் நடந்தது. ஜோஸ் சாக்ரேட்ஸ் விரைவில் பிரதமராக பதவி ஏற்பார் என அறிவிக்கப் பட்டுள்ளது.

## இந்தோனேசியாவில் நிலச்சரிவு

## 150 பேர் மண்ணில் புதையுண்டு சாவு



(ஜகார்த்தா)

இந்தோனேசியாவில் கடும்மழையால் ஏற்பட்ட நிலச்சரிவால், 150 இற்கும் மேற்பட்டோர் பரிதாபமாக பலியாகினர். சுனாமிப் பேரழிவிலிருந்து மீள்வதற்கு முன் இந்தோனேசியாவை இயற்கை தொடர்ந்து விரட்டுகிறது. இந்தோனேசியத் தலைநகர் ஜகார்த்தாவிலிருந்து தென்கிழக்குப் பகுதியில் அமைந்துள்ள பாங்டங் ஜகார்த்தாவிலிருந்து 200 கிலோமீற்றர் தொலைவிலுள்ள இப்பகுதியில் நேற்று முன் தினம் புயல் காற்றுடன் மழை பெய்தது.இதனையடுத்து 'சிமாஹி' என்ற இடத்தில் ஏற்பட்ட நிலச்சரிவால் பல வீடுகள் மண்ணில் புதையுண்டது. அதிகாலையில் நிலச்சரிவு நடந்ததால் வீடுகளில் தூங்கிக்கொண்டிருந்த நூற்றிற்கு மேற்பட்டோர் மண்ணில் புதையுண்டனர்.

## இராணுவத்தினரின் எண்ணிக்கையை

## பலமடங்காக உயர்த்த ஆப்கான் அரசு முடிவு

(காபூல்)

ஆப்கானிஸ்தான் அரசு தனது இராணுவத்தினரின் எண்ணிக்கையை பலமடங்காக உயர்த்த முடிவு செய்துள்ளது.

ஆப்கானிஸ்தான் நாட்டில் உள்ள தேசிய இராணுவத்தில் தற்போது 20 ஆயிரம் வீரர்களே இருக்கிறார்கள். உள்நாட்டு பாதுகாப்பு மற்றும் தீவிரவாதிகளை ஒடுக்கும் நடவடிக்கைக்கு இந்த இராணுவ பலம் போதுமானதாக இல்லை. எனவே இராணுவத்தினரின் எண்ணிக்கையை 70 ஆயிரமாக உயர்த்த ஆப்கானிஸ்தான் அரசு முடிவு செய்துள்ளது. அத்தோடு புதிதாக விமானப் படையும் உருவாக்கப்படவுள்ளது. அடுத்த ஆண்டுக்குள் இத்திட்டம் நிறைவேற்றப்படும் என்று கூறப்படுகிறது. இந்தத் தகவல்களை ஆப்கானிஸ்தான் பாதுகாப்பு அமைச்சர் அப்துல ரகிமான் வார்திக் தெரிவித்தார்.

## அமெ.போர் தொடுத்தால் ஓடஓட விரட்டுவோம்

### —வடகொரிய இராணுவ அதிகாரிகள் தெரிவிப்பு

வடகொரியா மீது அமெரிக்கா போர் தொடுத்தால், அமெரிக்கப் படையை நிலை குலைய வைத்து ஓடஓட விரட்டுவோம் என்று வட கொரிய இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர். அதிபர் கிம்மின் பிறந்த நாளை இராணுவ வீரர்கள் உற்சாகமாகக் கொண்டாடினார்கள். இந்த நிகழ் வின் போதே இராணுவ அதிகாரிகள் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

இது பற்றி ஆசிய பசுபிக் பகுதி அமெரிக்கப் படைகளின் கொமாண்டர் அட்மிரல் வில்லியம் பாலோன் கூறுகையில், கொரியாக் கடலோரம் அமெரிக்கப் படைகள் பலப்படுத்தப்பட்டுள்ளன. தென்கொரிய நாட்டிலுள்ள 6 லட்சத்து 90 ஆயிரம் இராணுவத்தினரில் 30 ஆயிரம் பேர் அமெரிக்க வீரர்கள் ஆவார்கள் என்று தெரிவித்தார். தற்போது வடகொரியாவில் 12 லட்சம் இராணுவ வீரர்கள் இருப்பது குறிப்பிடத்தக்கது.

## 700 கிராம் எடைகொண்ட குழந்தைக்கு

## இருதய அறுவைச் சிகிச்சை நடத்தி சாதனை

(சிலிகான்வேலி)

குறைப் பிரவசத்தில் 700 கிராம் எடையுடன் பிறந்த குழந்தையின் திராட்சைப்பழஅளவு இருதயத்தில் அறுவைச் சிகிச்சை நடத்தி இந்திய டாக்டர் உயிரை காப்பாற்றினார்.

அமெரிக்காவின் ஸ்டான் போர்டில் லுசிலிசால்டர் பக்கர்ட் குழந்தைகள் மருத்துவமனை உள்ளது. கடந்த சனவரி 30 ஆம் திகதி 13 வாரம்· குறைப்பிரவசத்தில் ஒரு குழந்தை பிறந்தது. ஜரிக் டிலியோன் என பெயரிடப்பட்ட உலகின் மிகச்சிறிய அக்குழந்தையின் இருதயத்தில் கோளாறு இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. கடந்த ஆறாம் திகதி அக்குழந்தை இருதய அறுவைச் சிகிச்சைப் பிரிவு தலைமை டாக்டர் மோகன் ரெட்டி தலைமையில் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.

இது குறித்து இந்தியரான டாக்டர் வி.மோகன் ரெட்டி கூறுகையில் ; குறைப்பிரவசத்தில் பிறந்த அக்குழந்தையின் தசைகள் மிக மென்மையாக இருந்தன. சுட்டுவிரல் அளவில் திராட்சைப்பழ வடிவில் இருந்த அக்குழந்தையின் இருதயத்தில் அறுவைச் சிகிச்சை வெற்றிகரமாக நடந்தது. கைகளை குறுக்கிக் கொண்டு மிகத்துல்லியமாக அதை செய்ய நேர்ந்தது. இதன் மூலம் உயிர் பிழைக்காது எனக் கருதப்பட்ட அக்குழந்தை தற்போது நல்ல நிலையில் இருக்கிறது என்றார்.

## வாய்ப்பைப் பயன்படுத்த புஷ் கோரிக்கை

தற்போதைய வாய்ப்பை சரியாகப் பயன்படுத்திக் கொள்ளுமாறு அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் டபிளயூ புஷ் பலஸ்தீனத்தின் புதிய பிரதமர் முகமட் அப்பாஸைக் கேட்டுள்ளார். அடுத்த மாதம் லண்டனில் நடைபெறும மாநாடு தொடர்பாக சிறந்த கட்டமைப்பை வகுத்து சர்வதேச நிதி உதவிகளைப் பெற உதவுமாறும் அவர் கூறியுள்ளார். இதேவேளை அமெரிக்க சனாதிபதி புஷ் தற்போது ஐரோப்பிய நாடுகளுக்கான விஜயத்தை ஆரம்பித்துள்ளார்.





இஸ்ரேலின் கேசியாட் சிறையிலிருந்து திங்கட்கிழமை விடுதலை செய்யப்பட்டு கைகள் கட்டப்பட்ட நிலையில் பேருந்தில் அழைத்துச் செல்லப்படும் பலஸ்தீனக் கைதிகள் வெற்றிச் சின்னமாக இரு விரல்களைக் காட்டுவதை முதலாவது படத்திலும் இவர்கள் மேற்குக்கரை நகரில் பலஸ்தீன போராளி ஒருவரால் வரவேற்கப்படுவதை இரண்டவது படத்திலும் காணலாம்.






கடந்த 13ஆம் திகதி இத்தாலி கத்தானியாவில் தமிழ்ச் சங்கத்தினராலும், தமிழர் ஒருங்கிணைப்புக்குழுவினரின் ஏற்பாட்டில் அண்மையில் தேசத்துரோகிகளினால் படுகொலை செய்யப்பட்ட தமிழீழ விடுதலைப்புலிகளின் மட்டு. அம்பாறை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் லெப். கேணல் கௌசல்யன் மற்றும் ஏனைய போராளிகளையும், மாமனிதர் சந்திரநேரு அரியநாயகம் அவர்களையும் நினைவுகூர்ந்து வீரவணக்க நிகழ்வு நடத்தப்பட்டது. அத்துடன் சுனாமி ஆழிப்பேரலையின் அனர்த்தத்தில் இறந்து போனவர்களின் 45ஆம் நாள் நினைவு நிகழ்வும் நடைபெற்றன. இதில் நூற்றுக்கணக்கான தமிழ் மக்களுடன் இத்தாலிய மக்களும் கலந்து கொண்டதுடன், உரையாற்றியும் இருந்தனர்.

# அ.சா.நிறுவனங்கள் திட்டங்களைத் திணிப்பதைத் தவிர்த்து

# மக்களின் தேவைகளையறிந்து செயற்பட வேண்டும்!

## தமிழீழ அரசியல்துறை மகளிர் பொறுப்பாளர் வலியுறுத்து

(மட்டக்களப்பு)

**“அரசசார்பற்ற நிறுவனங்கள் தங்கள் திட்டங்களை மக்களுக்குத் திணிப்பதைத் தவிர்த்து மக்களின் தேவைகளை உணர்ந்து திட்டங்களை தயாரிக்க வேண்டும்”. இவ்வாறு தமிழீழ மகளிர் அரசியல்துறைப் பொறுப் பாளர் தமிழினி தெரிவித்தார்.**

அம்பாறை தம்பட்டைதிடலில் நேற்று முன்தினம் சுனாமியால் பாதிப்புற்றோருக் கான தற்காலிக வீடுகள் கையளிக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகை யில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.


அவர் மேலும் தெரிவிக்கையில்;

தம்பட்டைக் கிராமம் அழிவின் உச்சியில் நின்று நலிவுற்ற நிலையில் இருந்ததை நாங்கள் அறிந்தோம். இது ஓர் வரலாற்றுப் புகழ்மிக்க கிராமமாகும். எமது மக்களின் வியர்வையும், கண்ணீரும் சேர்ந்து கட்டப் பட்ட வீடுகளை சுனாமிப்பேரலை அடித்துச் சென்று விட்டாலும் தொடர்ந்தும் நாங்கள் சலித்துவிடாது எமது மண்ணையும், பொருளாதாரத்தையும் மீண்டும் கட்டி யெழுப்புவோம் என்ற அந்த நம்பிக்கையை ஊட்டும் முகமாகவே இந்தத் தற்காலிக வீடுகள் அமைக்கப்பட்டுள்ளன. சுனாமிப் பேரழிவிற்குப் பின் பல நிறுவனங்கள் நிவாரணங்களை வழங்க முன்வந்தன. இது ஓர் பாராட்டுக்குரிய விடயமாகும். இருந்தும் நிவாரணப்பொருட்கள் பெற்றுக்கொள்ளும் மக்களின் உள நிலையைப் புரிந்துகொண்டு அவற்றை வழங்கிக் கௌரவப்படுத்த இந்நிறுவனங்கள் தவறிவிட்டன. வீடுகளை அமைக்கும்போது எமது பிரதேசத்திற்கு, காலநிலைக்குப் பொருத்தமான வீடுகளை அமைத்துக்கொடுத்தல் வேண்டும். எமது பிரதேசம் ஓர் வெப்பவலயமாகும். இதற்குத் தகரத்தினால் அமைத்துக்கொடுக்கப்படும் வீடுகள் பொருத்தமற்றதாகும். இவற்றைப் பல நிறுவனங்கள் இன்னும் செயற்படுத்தி வருகின்றன. அந்த வகையில் தமிழர் புனர் வாழ்வுக்கழகம் இன்று அமைத்துக் கொடுத்துள்ள வீடுகள் பாராட்டுதற்குரியன வாகும். கூரை கிடுகுகள் கொண்டதும், தரை சீமெந்தினாலும், காற்றோட்ட மானதாகவும் அமைக்கப்பட்டிருப்பது சிறப் பானதாகும். அரச சார்பற்ற நிறுவனங்கள் தங்கள் திட்டங்களை மக்களுக்குத் திணிப் பதைத் தவிர்த்து மக்களின் தேவைகளை உணர்ந்து திட்டங்களைத் தயாரிக்கவேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

இதில் மூத்த பத்திரிகையாளர் சிவப்பிர காசம் அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்தலைவர் மாணிக்கவாசகம் ஆகி யோரும் உரையாற்றினர்.

மூத்த பத்திரிகையாளரான சிவப்பிர காசம்உரையாற்றுகையில் தம்பட்டைக் கிராமம் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஓர் கிராமம் என்றும் சேர, சோழ, பாண்டியர் களின் ஆட்சிக்கு முன்பே தம்பட்டையில் மக்கள் வாழ்ந்துவந்தனர் என்றும், இவ் வாறான வரலாற்றைக் கொண்டவர்களின் வாழ்க்கையில் சுனாமிப்பேரலை ஓர் பேர ழிவை ஏற்படுத்திவிட்டது. இருந்தபோதிலும் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் இக்கிராம மக்களுக்கு இருப்பிடங்களை அமைத்துக் கொடுத்ததன் மூலம் வரலாற்றில் இடம்பிடித் துள்ளது எனக் குறிப்பிட்டதுடன், அரசாங்கம் எப்போது தங்களுக்கு வீடுகளை அமைத்துக் கொடுக்கும் என்ற நம்பிக்கை இல்லாத இவ் வேளையில் ஒவ்வொருவருக்கும் ஓர் சிறப் பான வீட்டை தமிழர் புனர்வாழ்வுக் கழகம் அமைத்துக்கொடுத்துள்ளது எனவும் குறிப் பிட்டார்.

தொடர்ந்து அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத் தலைவர் மாணிக்க வாசகம் பேசுகையில் தமிழர் புனர்வாழ்வுக் கழக மானது நாங்கள் எப்போதும் எதிர்பார்த்ததை விடவும், இந்த சமுதாயம் எடைபோட்ட அந்த மதிப்பீட்டில் இருந்தும் மிகவும் தீவிரமாக மேலோங்கியுள்ளது. அதன் அண்மைக்கால செயற்பாடுகள் எமக்கும், வெளியுலகிற்கும் தெளிவுபடுத்துகின்றது எனக் குறிப்பிட்டார். தொடர்ந்தும் அவர் கருத்துத் தெரிவிக்கை யில் வெளியுலகில் இருந்தும் எம்மவர் களிடமிருந்தும் பெற்ற உதவிகளை மிகவும் கண்ணியமாக அரசசார்பற்ற நிறுவனம் என்ற வகையில் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் மக்களுக்கு பகிர்ந்தளித்திருக்கின்றது. தொடர்ந்தும் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் இதுபோன்ற செயற்பாடுகள் மேலோங்க வேண்டும் எனவும் குறிப்பிட்டார்.




பூந்தோட்டம் கலைமகள் முன்பள்ளி யில் நடைபெற்ற பெற்றோர் தினமும், பரிசளிப்பு விழாவும் நிகழ்வில் முன் பள்ளி ஆசிரியை மாணவி ஒருவருக்கு பரிசிலை வழங்குவதனையும், முன்பள்ளிச் சிறார் களின் கலை நிகழ்வையும் படங்களில் காணலாம்.

படம் ஆறு சுபாஸ்கரன்
(வவுனியா செய்தியாளர்)

# 18 இலங்கைத் தமிழ் அகதிகள் நேற்று முன்தினம் நாடு திரும்பினர்

தமிழ்நாடு திருநெல்வேலி மாவட்டத்தில் அகதிகளாக வாழ்ந்து வந்த 18 இலங்கை வாழ் தமிழர்கள் நேற்று முன்தினம் தலை மன்னார் ஊடாக தாயகம் திரும்பினர். இவர் களில் 6 ஆண்களும் 12 பெண்களும் அடங்கு வர்.இந்தியாவிலிருந்து படகு மூலம் வந்து மன்னார் கடற்கரை மணல் திட்டொன்றில் இறக்கி விடப்பட்டிருந்த இவ் அகதிகள் சிறிலங்கா கடற்படையினர் உதவியுடன் கரைசேர்ந்தனர். பின் இவர்கள் மன்னார் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர்.நீதிமன்ற நடவடிக்கை களின் பின் நீதிபதி எம் எச். அப்துல்லா அகதி களை அவர்களின் சொந்த இடங்களுக்கு அனுப்பி வைத்தார். (18)

# முல்லைத்தீவு நகரை கட்டியெழுப்புவதற்கான நில அளவைகள் குறித்து கலந்துரையாடல்

முல்லைத்தீவு நகரினைப் புதிய நகரமாக மாற்று வதற்கான நிலஅளவை தொடர்பான கலந்துரையாடல் கடந்த 15 ஆம் திகதி காலை 11.00 மணிக்கு முல்லை மாவட்ட அரசஅதிபர் செயலக மாநாட்டு மண்டபத்தில் மேலதிக அரசாங்க அதிபர் தலைமையில் ஆரம்ப மானது.

இதில் புதிய நகரத்தில் முதற்கட்டமாக நில அளவை மேற்கொள்வது தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டு வட்டுவாகல் தொடக்கம் சிலாவத்தை தீர்த்தக்கரை மட்டுமான ஆறு கிலோமீற்றர் தூரத்தை உடனடியாக நில அளவையை மேற்கொள்ளலாம் எனவும் கடற்கரையிலிருந்து 300 மீற்றர் தூரத்திலேயே நிரந்தரக்குடியிருப்புக்கள் அமைப்பதற்கான முறையில் நிலஅளவை நடைபெறவேண்டும் எனவும் முல்லை. மாவட்ட தமிழீழ நிர்வாக சேவைப்பொறுப்பாளர் முரளி தெரிவித்தார்.

இந்தக்கலந்துரையாடலில் கடற்புலிகளின் முல்லை. மாவட்ட அரசியல்துறைப்பொறுப்பாளர் மா.ரங்கன், புதியநகரை நிர்மாணிப்பதற்கான கடற்புலிகளின் பொறுப்பாளர் க.தினேஷ், முல்லை.மாவட்ட தமிழீழ நிர்வாகசேவைப் பொறுப்பாளர் செ.முரளி, கரை துறைப்பற்று உதவி அரச அதிபர் அ. சோதிநாதன், உதவி அரச அதிபர் தலைமைப்பீட அதிகாரி செல்வி ப.ஆரணி, உதவி நிலஅளவை அத்தியட்சகர் சே.சண் முகலிங்கம், முல்லை.மாவட்ட நிலஅளவையாளர் அழ கேந்திரம் உட்பட பெருமள்வானோர் கலந்து கொண் டனர். (20)

## சனசமூக நிலைய புதியநிர்வாகத் தெரிவு

வட்டக்கச்சி கல்மடு நகர் சம்புக்குள சன சமூக நிலைய புதிய நிர்வாகத் தெரிவு அண்மையில் கல்மடு நகர் கிராம சேவையாளர் தெய்வவேற்பரமநாதன் தலைமையில் இடம்பெற்றது.புதிய தலைவராக தே.இராமஜெயமும், உப தலைவராக த.ஐயாசாமியும், செயலாளராக சு. சின்னையாவும், உப செயலாளராக மா.காளியப்பனும், பொருளாளராக க. குமாரவேலும் தெரிவு செய்யப்பட்டனர். இந் நிகழ்வில் அரசியல் துறை கிராமப் பொறுப்பாளர் கதிர்நேசனும், கே.ஆர் நிறுவன சம்புக்குள் இணைப்பாளரும், பொது மக்களும் கலந்து சிறப்பித்தனர். (12)

# அரச ஊழியர்கள் வீடு செல்ல பேருந்துச் சேவை வேண்டும்!

(வடமராட்சி கிழக்கு)

பளைப் பகுதியில் வேலை செய்யும் அரச ஊழியர்கள் தமது வேலைக்காக பளைக்குத் தினமும் யாழ்ப்பாணத்திலிருந்து வருகிறார்கள். இவர்களில் பாடசாலை ஆசிரியர்கள், உதவி அரச அதிபர் பணிமனை யினர், பச்சிலைப் பள்ளி பிரதேச சபையினர், வைத்தியசாலை ஊழியர் கள் உள்ளிட்ட நூற்றுக்கு மேற்பட்டோர் வந்து செல்கின்றனர். இவர்கள் ஒவ்வொரு நாளும் வந்து திரும்புவது வழமை இதில் வெள்ளிக்கிழமை அல்லது வெள்ளியும் விடுமுறை நாள் என்றால் வியாழன் போன்ற நாட் களில் அவர்கள் யாழ்ப்பாணம் செல்வதற்காக பளையில் மாலை 5.00 மணி வரை காத்து நின்று விட்டு கடைசியில் ஆட்டோக்களை வாடகைக்கு அமர்த்தி முகமாலை வரை செல்வதனைஅவதானிக்கக்கூடியதாகவுள்ளது.

வெள்ளிக்கிழமைகளில் பாடசாலை 2.30 மணிக்கு விட்டாலும் அந்த ஆசிரியர்கள் மாலை 5.00 மணிவரை இறுதிப்பேருந்திலும் இடமில்லாமல் விட்டால் ஆட்டோ பிடித்துக் கொண்டும் போகின்றார்கள், கிளிநொச்சி, முல்லைத்தீவு போன்ற பகுதியிலிருந்து பேருந்துகள் நிறையப் பயணி களுடன் வருவதால் பளையில் மறித்தாலும் நிற்காமல் போகின்றன. பேருந்துகளுக்காக நிற்பவர்கள் அங்கும் இங்குமாய் வரும் வாகனங்கள் எல்லாவற்றையும் மறித்து மறித்து ஏறுவதைக் காணலாம். இதனால் அவர்கள் பெரும் விசனமடைவதுடன் வெள்ளிக்கிழமையிலாவது தமக்காக ஒரு பேருந்தை இயக்கச்சியிலிருந்து அல்லது பளையிலிருந்தாவது சம்பந்தப்பட்டவர்கள் ஏற்பாடு செய்து தரவேண்டும் என்று வேண்டி நிற்கின்றார்கள். (11)

# கொடிகாமம் வரணிப்பகுதி இராணுவத்தளம்

# பாரிய அளவில் பலப்படுத்தப்பட்டு வருகின்றது!

## -சிவில் அலுவலக நடவடிக்கையால் மக்கள் பீதி

(வரணி)

**கொடிகாமம் - பருத்தித்துறை வீதி வரணிப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள சிறிலங்கா இராணுவத்தளம் மிகவும் பாரிய அளவில் பலப்படுத்தப்பட்டு வருகின்றது.**

கடந்த இரு மாதங்களாக படையினர் இந்தப் பலப்படுத்தல் நடவடிக்கையில் தொடர்ந்து ஈடுபட்டுள்ளனர். சுமார் அரைக் கிலோ மீற்றர். தூரத்திற்கு மேல் பிரதான வீதியின் இரு மருங்கும் வீதிக்கு மிகவும் அருகாக வீதியின் வேலி போடப்பட்டு வீதிப் பக்கமாக கொமாண்டோ கம்பிகளும் போடப்பட்டுள்ளன.

இராணுவத்தின் இந்த நடவடிக்கையால் வீதியால் பயணிப்போர் பயப்பீதியுடன் பயணம் மேற்கொள்கின்றனர்.

அத்துடன் தளத்தின் முன்னரங்க காவல் நிலைகளும் பாரிய அளவில் மண்போடப்பட்டும் மண் மூட்டைகளால் அமைக்கப்பட்டு முழு அளவில் உரு மறைப்புச் செய் யப்படுகின்றன.

அத்துடன் அப்பகுதியில் சிவில் அலுவலகம் என்ற பெயரில் அலுவலகம் அமைத்து அங்கு இருக்கும் இராணுவத்தினர் வீதியால் போவோர் வருவோரை அடிக்கடி மறித்து போர் சமாதானம் மற்றும் விடுதலைப்புலிகள் நடமாட்டம், தொடர்பாக துருவித் துருவி கேட்டும் வருகின்றனர்.

இராணுவத்தினரின் இந் நடவடிக்கை காரணமாக அப்பகுதி மக்களிடம் பெரும் அச்சம் நிலவி வருகின்றது.

# பாலத்தின் நடுவில் இராணுவக் காவலரண்; வாகனப் போக்குவரத்தில் நெருக்கடி

(யாழ்ப்பாணம்)

கைதடி - கோப்பாய் வீதியிலுள்ள கோப்பாய் பாலத்தின் நடுவில் அமைக்கப்பட்ட இராணுவ காவலரணால் அப்பாதையூடான போக்குவரவில் ஈடுபடுவதில் வாகனச் சாரதிகள் பெரும் இன்னல்களை அனுபவித்து வருகின்றனர்.

நாவற்குழிப் பாலம் புனரமைப்பு பணிகள் இடம்பெற ஆரம்பித்துள்ளதால் கைதடியில் இருந்து யாழ். குடாநாட்டுக்கான போக்கு வரவுகள் கோப்பாய் பாலத் தினூடாகவே இடம்பெறுகின்றன.

இப்பாதையூடான போக்குவரவு ஆரம்பித்த பின்னர் இராணுவ காவலரண் மற்றும் பாதை சீரின்மையால் போக்கு வரவின் போது இரு சில தினங்களுக்கு முன் வாகனச் சாரதிகளுக்கிடையே ஏற்பட்ட சிறு தகராற்றால் ஒரு மணி நேரம் போக்குவரத்துத் தடைப்பட்டிருந்ததும் குறிப்பிடத்தக்கது.

# அச்சுவேலிக்கு மணல் ஏற்றிச் சென்ற ஆறு பாரவூர்திகள் பிடிபட்டன

(நல்லூர்)

மணல் ஏற்றிச் சென்ற ஆறு பேர் பொலிசாரால் பிடிக்கப்பட்டு நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டனர்.

அச்சுவேலிப்பகுதிக்கு மணல் கொண்டு சென்ற ஆறு பாரவூர்திகளையே பொலிசார் பிடித்ததுடன் சம்பந்தப்பட்டவர்களை மல்லாகம் நீதிமன்றில் ஆஜர் செய்தனர்.

யாழ்.குடாநாட்டில் மணலின் விலை அதிகரித்துள்ளதை அடுத்து இப்பகுதிகளுக்கு மணல் கொண்டு செல்வோரின் தொகை அதிகரித்துள்ளது. (41)

# 32 பல்கலை மாணவர்களுக்கு சுனாமி உதவித் தொகை

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையின் ஆதரவில் சுனாமி அனர்த்தம் காரணமாக தாய், தந்தை உறவினர்களை இழந்த 32 பல்கலைக்கழக மாணவர்களுக்கு தமிழ் தகவல் தொழில்நுட்ப ஒருங்கமைப்பினர் உதவித் தொகை வழங்கும் நிகழ்வு இன்று மாலை 4.00 மணிக்கு மாணவர் பேரவை அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வுகளில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக் கழகத் துணை வேந்தர் சு. மோகனதாஸ், யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி, தமிழ் தகவல் தொழில்நுட்ப இயக்குநர் மற்றும் விரிவுரையாளர்கள், மாணவர்கள் கலந்து கொள்ளவுள்ளனர். எனவே இந் நிகழ்வில் அழைக்கப்பட்ட மாணவர்கள் சமுகம் தரும்படி வேண்டப் பட்டுள்ளது. (36)

# சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையினர் உலக நாடுகளுக்கு சுற்றுப் பயணம்

(யாழ்ப்பாணம்)

சர்வதேச நாடுகளுக்கு பயணம் மேற் கொண்டுள்ள சர்வதே தமிழீழ மாணவர் பேரவையினர் எதிர் வரும் சனிக்கிழமை பிரான்ஸ் செல்லவுள்ளனர்.

கடந்த டிசம்பர் மாதம் நோர்வேக்குச் சென்ற மாணவர் பேரவை பிரதிநிதிகள் அங்குள்ள மாணவர் அமைப்பு தமிழ் அமைப் புக்களிடம் சென்று கலந்துரை யாடிய பின்பு நேற்று முன்தினம் ஜேர்மன் சென்று அங்குள்ள இளைஞர் அமைப்புக்கள் தமிழ் அமைப்பு க்களைச் சந்தித்தித்தனர். இங்குள்ள கல்வி நிலை தொடர்பாகவும், மாணவர் எதிர் நோக்கும் பிரச்சினை தொடர்பாகவும் இவர்கள் கலந்துரையாடி வருகின்றனர். (36)

## மாணவர்களுக்கு நிறுவனங்கள் உதவி

சுனாமி ஆழிப் பேரனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட உயர் கல்வி நிறுவனங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு உதவுவதற்கு றீடோ மற்றும் வூஸ் போன்ற சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் முன் வந்துள்ளன.

இவ் உதவிகள் யாவும் சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையினூடாக வழங்கப்படவுள்ளன.

சுனாமி அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட உயர்கல்வி நிறுவனங்களான தொழில்நுட்பக் கல்லூரி மற்றும் பல்கலைக்கழக மாணவர்களுக்கு ஏற்பட்ட இழப்புக்களின் அடிப்படையில் இவ் உதவிகள் வழங்கப்படவுள்ளன. (33)

# இராமநாதன் நுண்கலைக்கழக அரையாண்டுப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைக்கழக (சங்கீதம்/ நடனம்/ சித்திரமும் வடிவமைப்பும்) முதலாம் வருட இரண்டாம் அரையாண்டுப் பரீட்சைகள் நடத்தப் படவுள்ளன.

முன்னர் அறிவிக்கப்பட்ட படி நாளையும், நாளை மறுதினமும் பரீட்சைகள் நடைபெறவுள்ளதாக பரீட்சைக்கிளை சிரேஷ்ட உதவிப் பதிவாளர் அ .சிவனேஸ்வரன் அறிவித்துள்ளார். இதனை மாணவர்கள் கவனத்திற் கொண்டு பரீட்சையில் பங்கு பற்று மாறும் அவர் கேட்டுள்ளார்.

## போக்குவரத்துச் சேவை நேரம் நீடிப்பு

இலங்கை போக்கு வரத்து சபைக்கு உட்பட்ட வடபிராந்திய போக்கு வரத்துச் சபை யாழ். குடாநாட்டில் தனது பேருந்து சேவையின் நேரத்தை அதிகரித்துள்ளது.

பல தரப்பட்ட பயணிகளினதும் பயண நேரங்களை கருத்திற் கொண்டே இப் புதிய நேரம் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது தெரிகிறது.

இது வரை காலமும் யாழ். நகரில் இருந்து மாலை 8.00 மணிக்கு ஆரம்பமான ஏனைய பகுதிகளுக்கான பேருந்துப் பணி புதிய நேர அதிகரிப்பின் பின் கடந்த 20ஆம் திகதி முதல் காலை 8.15 மணிக்கு தொடங்குவதாக வடபிராந்திய போக்குவரத்துச் சபை அலுவலகம் தெரிவித்துள்ளது.

# மக்களுக்கு மின்சாரம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

## முறைப்பாடு செய்தும் பயனில்லை

(தென்மராட்சி)

சாவகச்சேரியின் பிரதேச சபையின் மட்டுவில், சரசாலை கல்வயல் பகுதிகளுக்கு இதுவரை மின்சாரம் வழங்கப்படவில்லை.

மின்சாரம் வழங்குவதற்காக மின்சாரக் கம்பங்கள் நாட்டப்பட்டு, கம்பிகள் பொருத்தப்பட்ட பின்பும் இதுவரை மின் விநியோகம் ஏற்படுத்தப்படவில்லை.

இது தொடர்பாக சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு முறையிட்டும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என அப் பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர். (28)

# கோஷ்டி மோதலால் நான்கு பேர் பருகாயம்

(நல்லூர்)

மீசாலைப் பகுதியில் இளைஞர்களிடையே இடம்பெற்ற கோஷ்டி மோதலில் நல்வர் வாள் வெட்டுக்கு உள்ளாகி யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு சுமார் 7 மணியளவில் மீசாலைச் சந்தியில் நின்ற இளைஞர் குழுவுக்கும், அயல் பகுதியில் இருந்து உந்துருளிகளில் வந்த இளைஞர் குழுவுக்கும் இடையே மோதல் இடம் பெற்றுள்ளது. உந்துருளிகளில் வந்த குழுவினர் தாம் கொண்டு வந்த வாள்களினால் மீசாலைப் பகுதியைச் சேர்ந்த இளைஞர் குழுவை வெட்டியுள்ளார்கள்.

வெட்டுக் காயங்களுக்கு உள்ளான மீசாலைப் பகுதியைச் சேர்ந்த இராசலிங்கம் காஞ்சன் (வயது -20) தர்மராசா ஜெயகஜன் (வயது 24) இரத்தினம், விநாயகேஸ்வரன் (வயது -30) சிவராசா கோபிநாத் (வயது-19) ஆகியோர் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்ட பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்திய சாலைக்கு உடனடியாக அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர். (41)

# "பூச்சிகள் அரிக்கும் கண்ணிமைகள்" நாடக நிகழ்வு இன்று

(யாழ்ப்பாணம்)

"பூச்சிகள் அரிக்கும் கண்ணிமைகள்" நாடக நிகழ்வு இன்று யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெறவுள்ளது.

காலை 10.30 மணிக்கும் மாலை 3.30 மணிக்கும் நாடக நிகழ்வு இடம்பெறவுள்ளது. அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் பெண்கள் அபிவிருத்தித் திட்டப்பிரிவுப் பெண் தலைமைத் துவக்குடும்பங்களின் பொருளாதார மேம்பாட்டு நிதிக்காக இந்நாடக நிகழ்வு இடம்பெறவுள்ளது. (36)

# சுனாமி உளத்தாக்கம் அமைதிப்படுத்த தியானம்

(யாழ்ப்பாண்ணம்)

சுனாமி ஆழிப்பேரலையின் தாக்கத்தால் உளப்பாதிப்புக்குள்ளாகியுள்ள மக்களின் உள்ளத்தை அமைதிப்படுத்துவதற்கான மாபெரும் இறைதியான வழிபாட்டு நிகழ்வு ஒன்று இன்று முற்பகல் யாழ் கொழும்புத்துறை புனித செபமலை அன்னை தேவாலயத்தில் இடம்பெறவுள்ளது.

இத்தியானவழிபாட்டின் தொடர்கள் யாழ்.குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் இடம் பெறவுள்ளன. (33)

## அரங்கியற் கட்டுரைகள் நூல் வெளியீடு

"அரங்கியற் கட்டுரைகள்" நூல் வெளியீட்டு நிகழ்வு இன்று காலை 10.00 மணிக்கு இணுவில் மத்திய கல்லூரி ஆரம்பப் பிரிவு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இதற்குப் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழகத் துணை வேந்தர் பேராசிரியர் சு. மோகனதாஸ் கலந்து கொள்ளவுள்ளார்.

## மெய் வன்மை போட்டி

(சாவகச்சேரி)

மட்டுவில் சாந்தநாயகி வித்தியாலய இல்ல மெய்வன்மை போட்டி வரும் சனிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் இடம்பெறவுள்ளது என வித்தியாலய அதிபர் எம். செபஸ்ரியாம்பிள்ளை அறிவித்துள்ளார்.

## முன்னோடிப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

இந்து நாகரிகம், இந்து சமயம் தரம் 13 முன்னோடிப் பரீட்சை அடுத்த மாதம் 14ஆம், 15ஆம் திகதிகளில் இடம்பெறும்

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபை வருடாந்தம் இப்பரீட்சையை நடத்தி வருகின்றது.

## நிர்வாகிகள் தொரிவு

சரவணை கிழக்கு பாரதி சன சமூக நிலையத்திற்குப் புதிய நிர்வாகிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். தலைவராக ச.கேதீஸ்வரன், செயலாளராக க.கணேசலிங்கம், பொருளாளராக இ.யோகநாதன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். போசகர்களாக சி.மகாலிங்கம், கா.முத்துலிங்கம் ஆகியோருடன் மேலும் எட்டுப்பேர் நிர்வாக உறுப்பினர்களாகத் தெரிவாகினர்.

## வெற்றியீட்டியது

(யாழ்ப்பாணம்)

பாடசாலை அணிகளுக்கிடையேயான பத்தொன்பது வயதுக்குட்பட்டவர்களுக்கான கிரிக்கெட் போட்டியில் யாழ்ப்பாணக் கல்லூரி அணியை மஹாயன் கல்லூரியணி ஆறு விக்கெட்டுக்களால வெற்றியீட்டியுள்ளது.

## வீதி விபத்துக்கள் அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் நகரை அண்டிய சிராம்பியடிப் பகுதியில் வீதி விபத்துக்கள் மிகவும் அதிகரித்துள்ளன.

அண்மையில் இப் பகுதியில் மட்டும் 32 வீதி விபத்துக்கள் இடம் பெற்றுள்ளன. இப் பகுதியிலுள்ள சிறு பாதையூடாக இடம்பெற்று வரும் அதிகரித்த போக்குவரத்தே இவ் விபத்துச் சம்பவங்கள் இடம் பெறக் காரணமாகின்றது. (28)

# எண்பது வருச கடல் அனுபவத்தில் இப்பிடிக் கடலைக் கண்டதே இல்லை

**எண்பது வயது நிரம்பிய முல்லைத்தீவு கள்ளப்பாட்டைச் சேர்ந்த காளியப்பு என்ற முதியவர் தனது இத்தனை நாள் கடல் அனுபவத்தில் இப்பிடியான சம்பவங்கள் எதையும் காணவில்லை. கடல் எப்பிடி வந்தது தான் எப்பிடித்தப்பினார் என்பவற்றை விபரிக்கிறார்.**



**நான** வீட்டுப் பின் பத்திக்குள்ள இருந்து வலை பொத்திக் கொண்டிந்தன். கொஞ்சம் பெரிய பொத்தலுகள் எண்டுறதால கொஞ்சம் அலுப்பாயும் கிடந்தது. எழும்பிப் போய்ச் சாப்பிடுவம் எண்டு யோசிச்சுப் போட்டும் பிறகும் அந்தப் பொத்தல பொத்தி முடிச்சுப் போட்டு ஒரேதா வெளிக்கிடுவம் எண்டு நினைச்சு அப்பிடியே இருந்து வேலையைச் செய்து கொண்டிருந்தன்.

நல்லா நேரம் வந்திட்டுது கடல் பக்கமாக ஏதோ "பொலும் பொலும்" எண்டு சத்தம் கேட்டுக் கொண்டிருந்தது. அந்தச் சத்தம் கேட்டதும் நான் நினைச்சன் பாழ்பட்டுப் போன நேவிக்காறர் வந்து அடிக்கிறாங்கள் போல இவங்களுக்கு ஏன் இந்த அநியாய வேலை எண்டு எனக்குள்ள நினைச்சுக் கொண்டு வெளியால எழும்பி மெதுவாக நடந்து வந்தன்.

என்னடா சத்தம்"பொலு பொலு" எண்டு ஏதோ இரைஞ்சு கொண்டிருந்தது. ஏதோ புதுக் கப்பல் வந்து அடிக்கிறான் போல இப்பிடிச் சத்தம் கேட்குது ஊரையே அழிக்கப் போறான் போல கிடக்கு எண்டு என்ர பாட்டில சொல்லிக் கொண்டு வீட்டுப் படலைக்குப் போகேல்ல கடல் "உம் உம்" எண்டு இரைஞ்சு கொண்டு கரையில கட்டி நிண்ட போட்டுகள் எல்லாத்தையும் தூக்கிக் கொண்டு பறந்து வந்திச்சுது.

அதப்பாத்த உடனேயே நான் திரும்பி ஓடி வந்து பின் வேலிய முறிச்சுப் பாய்வம் எண்டு வெளிக்கிட்டன். வேலிக்குள்ள பூர கடல் எனக்குப் பின்பக்கம் வந்து அடிச்சுது ஒரு அடி... எனக்கு உயிர் போன மாதிரி இருந் தது.

அந்த அடியோட வெளவால் தொங்கின மாதிரி வேலிக்குள்ள தொங்கிட்டன். அப்பிடியே தண்ணி கனக்க வர வேலி பிரண்டு எனக்கு மேல விழுந்து போச்சு. வேலி விழுந்ததோட நான் எனித் தப்ப மாட்டன் என்ர உயிர் இதில தான் போகப் போது எண்டு நினைச்சன்.

அப்பிடியே இருக்க வேலி மற்றப் பக்கம் பொறிஞ்சு பிரண்டு போச்சுது. அதோட என்னை ஒத்தி மேல கொண்டு போச்சுது. நான் தண்ணியோட சேந்து அடைஞ்சு போய்க் கொண்டிருந்தன். தண்ணி என்னைக் கொண்டு போன வேகத்தில எங்கையாவது அடிச்சிருக்கும் எண்டால் நான் சிதறித்தான் செத்திருப்பன்.

தண்ணியோட அடிபட்டுப் போக ஒரு மரக் கொப்பு எனக்கு முன்னால தெரிஞ்சுது அந்தக் கொப்பில பிடிச்சன். அது எங்க கொப்பு!?அது என்ர கையோட வந்திட்டுது. அப்பி டியே அடிபட்டுக் கொண்டு போக ஒரு பனையின்ர வடலி தான் வந்தது. அதை எட்டிப் பிடிச்சன் பிடிச்ச பிடியில பனம் மட்டை என்ர கையை வெட்டிப் போட்டுது.

நான் பனை வடலியக் கட்டிப் பிடிச்சுக் கொண்டு படுத்த மாதிரித் தான் நிற்கிறன் தண்ணி என்ன இழுத்துக் கொண்டிருந்தது. நான் கையை விடவேயில்லை. இப்பிடி இருக்க ஒரு கட்டத்தில தண்ணி வடிய வெளிக்கிட்டுது. தண்ணி வடிஞ்சாப்பிறகுதான் பாத்தன் ஒரு பெரிய பனையில தான் பிடிச்சிருக்கிறன்.

தண்ணி வடிஞ்ச உடனே என்ர பிள்ளையள், பேரப் பிள்ளையள் எல்லாத்தையும் ஞாபகம் வந்திட்டுது. உடனே மரத்தால இறங்கி அந்த தண்ணிக்குள்ளாலதேட வெளிக்கிட்டுட்டன்.

எனக்கு ஒரு மகனும் ஆறு பேரப்பிள்ளையளும், சின்னத் தங்காட்டில; ஒரு மகளும் ஐந்து பேரப் பிள்ளையளும், வண்ணாங்குளத்தில. இதுக்கிடையில என்ர மனுசி மாக்கற்றில மகன் கடல் கரையில இருக்கின்ற வாடி வீட்டில எல்லாமே கடல்ல அடிபட்டிருக் குங்கள்.

இப்பிடி இருக்க நான் வண்ணாங் குளத்தில இருக்கிற மகளைத் தேடிப் போய்க் கொண்டிருந்தன். இரண்டாவது கடல் மலை மாதிரி எழும்பி வந்து கொண்டிருந்தது. நான் அதையும் மனதில் வாங் காமல் மகளையும், பேரப்பிள்ளையளையும் தேடிப் போய்க் கொண்டே இருந்தன்.

எங்கட ஊர் ஆக்கள் ராசகுலம் அல்



போன்ஸ் எண்டு ரண்டு பேரும் ஒரு வீட்டுக்கு மேல நிண்டு "ரண்டாவது கடல் வருகுது ஓடி வா ஓடி வா" எண்டு கத்தி என்னைக் கூப்பிட்டாங்கள். நானும் ஓடிப் போய் அந்த வீட்டில ஏற கடலும் வந்திட்டுது அவங்கள் இல்லாட்டி நான் ரண்டாவது கடல்ல அம்பிட்டுச் செத்திருப்பன்.

ரண்டாவது வந்த கடல் முதல் வந்ததை விட மோசமாக இருந்தது. ஒரு மாதிரி தண்ணி கொஞ்ச நேரத்தால குறைஞ்சு போச்சுது. வீட்டுக்கு மேல நான் ஏறி நிக்கேக்க பாத்தால் பெரிய பெரிய மரங்கள் எல்லாத்தையும் சும்மா தடிக்குச்சு மாதிரி தண்ணி தூக்கிக் கொண்டு போச்சுது.

சனங்கள் எல்லாம் தத்தளிச்சுக் கொண்டிருந்துதுகள் ஒவ்வொரு சனங்களும் தத்தளிச்சுக் கொண்டு போறதைப் பாக்க எனக்கு மனம் கேட்கவே இல்லை இப்பிடித்தானே என்ர பிள்ளையளும், பேரப்பிள்ளையளும் தத்தளிச்சுக் கொண்டு போயிருப்பினம்.


அதை நினைச்ச உடனே என்னால மேல நிற்கவே ஏலாமல் இருந்தது. இப்பிடி இருக்க கொஞ்சப் பெடியள் வந்து "ஐயா இனியும் உதில நிண்டு தப்ப ஏலாது கடல் போய்ப் போய் வந்து கொண்டிருக்குது அதால கெதியாய் இறங்குங்கோ நாங்கள் உங்களைக் கொண்டு போய் விடுறம் எண்டினம்" சரி எனி நாங்கள் இருந்தென்ன இந்த இளம்பிஞ்சுகள் எல்லாம் போய்ச் சேந்திட்டுதுகள் எண்டு அழுதுகொண்டு இறங்கி வந்து கொஞ்சத்தூரம் போயிருக்க மாட்டம். மூண்டாவது கடல் வந்தது. மூண்டாவது கடல்வந்ததில எனக்குப்பயம் வந்திட்டுது என்னோட வீட்டுக்குமேல இருந்து இறங்கிவந்த ஆக்கள் "ஐயோ தம்பியவ கடல்வருகுது என்ன செய்யப் போறம் நாங்கள் சாகத்தான் போறம் போல கிடக்குது" எண்டு கத்தினார்.

அந்த இயக்கப்பெடியள் சொன்னாங்கள் " ஐயா நாங்கள் செத்தாலும் உங்களைச் சாகவிடமாட்டம் நீங்கள் ஒண்டுக்கும் யோசிக் காதையுங்கோ" எண்டு சொல்லிக்கொண்டு எங்களைத் தூக்கிக் கொண்டு ஓடிப்போய் ஒருமரத்தில ஏத்தி வடிவாப் பிடிச்சுக் கொண்டிருந்தினம்.

அந்தப்பிள்ளையள் இப்படிச்செய்யுங்கள் எண்டு நான் கனவில கூட நினைக்கேல்ல கிழவனாய்ப் போன எனக்குக் கூட சாகப் பயமாய் இருந்தது. ஆனால் அந்த இளம் பிள்ளையள் எப்பிடித்துணிஞ்சு அதுக்குள்ள இறங்கி ஆக்களைக்காப்பாற்றினதுகள் என்னால அந்தப்பிள்ளையளை நினைச்சுக்கூட பாக்க ஏலாமல் இருக்கு.

இப்படியே ஒருமாதிரி இறங்கி றால் குளக்கட்டுக்குப் போய்ச் சேந்து நெஞ்சளவு தண்ணிக்குள்ளால அதைத்தாண்டி எங்களைக்கொண்டு போய்விட்டினம்.

எல்லாத்தையும் தாண்டிப்போய்த்தான் பாத்தன் என்ர மூத்தமகள், பேரப்பிள்ளையள் ஒண்டும் இல்லை. வாடியில நிண்ட என்ர மூத்தமகன் இல்லை. ஒருத்தரையும் காணேல்ல. நான் அதில நிண்டு அழுது புலம்பிக்கொண்டுநிக்க இயக்கப்பிள்ளையள் வந்து வஸ்சில ஏத்திக்கூட்டிக்கொண்டு போய் முள்ளியவளை பாடசாலையில மருந்து கட்டிவிட்டினம்.



பகுதி -28

எனக்கு இப்ப எண்பது வயது இப்பிடி ஒருக் காலும் காணவே இல்லை. அறுப்பதிநாலாம் ஆண்டு அடிச்ச சூறாவளிகூட இப்பிடி அடிக் கேல்ல முதல் ஒருக்கால் வந்தகடல் பிறகும் பிறகும் திரண்டு திரண்டு வந்தது. என்ர எண்பது வயது கடல் அனுபவத்தில இப்பிடிக்கடலைக் கண்டதே இல்லை.

கடல்தொழில் செய்ய கடலுக்கபோய் ஆமிட்ட அடிவேண்டி போட்டுகள் பிரண்டிருக்கு சிலநேரம் கடல்ல சூறாவளி அடிச்சு போட்டுகள் அடிபட்டு புரண்டு கனபேர் கடலுக்க போயிருக்கினம் அப்பிடிப் போனவையளக் கூடக் காப்பாற்றியிருக்கிறம்

அ.லோகீசன்

ஆனால் இந்தக்கடல் ஒருத்தரையும் காப் பாற்றக்கூடியமாதிரி வரவே இல்லை. இதுபேய் மாதிரித்தான் இருந்தது. எல்லா இடமும் ஐயோ எண்ட சத்தம் தான் கேட்டது. தண்ணிவத்தின உடன எல்லாரும் வந்து தன்ர அப்பாவக் காணேல்ல, தம்பியக் காணேல்ல, அம்மாவைக்காணேல்ல அக்கா, தங்கச்சி, மனுசியைக்காணேல்ல எண்டு தேடிச்சினமே தவிர ஒருத்தரும் மற்ற வயக்காப்பாற்றுவம் எண்டிருக்கேல்ல. அந்த இயக்கப்பிள்ளையள் தான் வந்து அவர் இவர் எண்டு பாக்காமல் எல்லாரையுமே காப்பாற்றினவையள் இவ்வாறு தனது எண்பது வயது அனுபவத்தின் மறக்கமுடியாத சுமையைச் சொல்லி முடித்தார் அந்த முதியவர்.

அடுத்த பகுதியில் முல்லைத்தீவு கள்ளப் பாட்டில் வசித்துவரும் வெடிபொருளில் காலை இழந்த 24 வயது நிரம்பிய இளம் குடும்பஸ்தர் தனது மனைவியையும், ஒரே பிள்ளையும் கடல் கொண்டுபோன சோகததை விபரிப்பார்.

(தொடரும்)

# 14.02.05-20.02.05




## 14.

* கொக்கட்டிச்சோலையிலுள்ள புலிகளின் அரசியல்துறை மாவட்ட செயலகத்தில் மட்டு-அம்பாறை மாவட்ட முஸ்லிம் சமூக பிரதிநிதிகள் மத்தியில் புலிகள் அமைப்பும், அதன் தலைமையும் தமிழருக்கு மட்டும் உரியதொன்றல்ல தமிழர் தாயகத்திற்கு உரித்துடையோர் அனைவருக்கும் உரியதென அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவிப்பு.



* லெப்.கேணல் கௌசல்யன் உட்பட நான்கு போராளிகள், மாமனிதர் சந்திரநேரு ஆகியோரின் படுகொலையைக் கண்டித்து முல்லைத்தீவில் கண்டனப் பேரணிகளும், கூட்டங்களும் இடம் பெற்றன. இதேவேளை யாழ்ப்பாணத்தில் தனியார் போக்குவரத்துச்சேவை சங்கங்களின் ஒன்றியம் ஊர்வலம் ஒன்றை நடத்தியுள்ளனர்.




* லெப்.கேணல் கௌசல்யன் உட்பட்ட போராளிகள், மாமனிதர் சந்திரநேரு ஆகியோரை நினைவு கூரும் நிகழ்வு அவுஸ்திரேலியாவின் சிட்னி நகரில் இடம் பெற்றது.



* அரியாலை-முள்ளிப்பகுதியில் கிணற்றில் வீழ்ந்த குழந்தையை காப்பாற்ற முயன்ற தாயும் பலி.

* அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் லண்டனில் நோர்வே சிறப்புத் தூதுவர் எரிக்கை சந்திப்பு.

* கைதடிப் பகுதியில் 1986 ஆம் ஆண்டு இடம் பெற்ற எதிர்பாராத வெடிவிபத்தில் வீரச்சாவடைந்த லெப்.கேணல் பொன்னம்மான் உள்ளிட்ட போராளிகள் மற்றும் பொதுமக்கள் நினைவாக கைதடி மத்தியில் நினைவுத்தூபி திறந்துவைப்பு.



## 15.

* லெப்.கேணல் கௌசல்யன் உட்பட 06 பேர் படுகொலை செய்யப்பட்டதைக் கண்டித்து கொக்கட்டிச்சோலையில் வெகுசனப் போராட்டங்கள் இடம் பெற்றன. இதேவேளை மூன்று கோரிக்கைகளை முன்வைத்து யாழ்.இல் கூட்டுறவு,பொது அமைப்புக்கள் கண்டனப் பேரணியில் ஈடுபட்டன.



* மட்டு-அம்பாறை அரசியல்துறைப் பொறுப்பாளர் லெப்.கேணல் கௌசல்யன் உட்பட நான்கு போராளிகளினதும், மாமனிதர் சந்திரநேரு அரியநாயகம் அவர்களினதும் கொலையைக் கண்டித்து கிளிநொச்சியிலு[illegible]ிலும் மாபெரும் கண்டனப் பேர[illegible] இடம் பெற்றதுடன் கண்டன மகஜரும் கையளிப்பு.

* தமிழீழ அரசியல்துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் மாமனிதர் சந்திரநேரு அரியநாயகம் குடும்பத்தினரை சந்தித்தார்.



* சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்து நீண்ட நேரம் உரையாடினார். ஜே.வி.பியினரை சந்திக்க மறுப்பு.

## 16.

* அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவினர் திருமலைக்கு விஜயம்.



* லெப்.கேணல் கௌசல்யன் மாமனிதர் சந்திரநேரு உட்பட ஆறுபேர் கொலை செய்யப்பட்டதைக் கண்டித்து யாழ்.மாவட்டத்தில் கல்விச்சமூகத்தினரால் மாபெரும் ஆர்ப்பாட்டம் இடம் பெற்றது.



* ஆழிப்பேரலை அனர்த்தத்தில் தனது பெற்றோரைப் பிரிந்த பேபி-81 என்று அழைக்கப்பட்ட அபிலாஷ் பெற்றோரிடம் ஒப்படைப்பு.



* அமைச்சர் டக்ளஸ் தமது பொறுப்பின் கீழான அமைச்சின் உத்தியோகத்தர் ஒருவரைத் தாக்கினார்.

* யாழ்.பருத்தித்துறை வீதியில் ஆரிய குளத்திற்கு சமீபமாக உள்ள எரிபொருள் நிரப்பு நிலையம் தீ விபத்தினால் முற்றாக எரிந்தது.

* முன்னாள் மட்டு அம்பாறை அரசியல் துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் உள்ளிட்ட விடுதலைப்புலிகள் உறுப்பினர்கள் மற்றும் நாட்டுப்பற்றாளர் சந்திரநேரு ஆகியோரின் கொலையை ஐ.நா.செயலர் கொபி அனான் கண்டித்தமைக்கு எதிராக கொழும்பில் ஐ.நா செயலகம் முன்னால் பிக்குகள் முன்னணியைச் சேர்ந்த உறுப்பினர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.




## 17.

* வாகரைக்குச் சென்ற அரசியல் துறைப்பொறுப்பாளர் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்கள் தங்கியுள்ள நலன்புரி நிலையங்களுக்குச் சென்று மக்களுக்கான நிவாரண செயற்பாடுகளைப் பார்வையிட்ட பின்னர் புலிகள் சிறுவர்களைப் படையில் சேர்ப்பதான ஐ.நா சபையின் பட்டியல் குறித்து செய்தியாளர்களிடம் நிராகரிப்பு.



* கௌசல்யன் உள்ளிட்ட 06 பேர் படுகொலை செய்யப்பட்டதைக் கண்டித்தும், சுனாமி அனர்த்த நிவாரண உதவிகளை தமிழர் தாயகப் பகுதிகளுக்குப் பகிர்ந்தளிப்பதற்கான பொதுக் கட்டமைப்பை உருவாக்குவதில் அரசு கடைப்பிடித்து வரும் பொறுப்புணர்வற்ற செயல்களைக் கண்டித்து யாழ். மாவட்டத்தில் பொது அமைப்புக்களின் ஒன்றியம் மாபெரும் கண்டனப் பேரணியில் ஈடுபட்டது.



* ஏ-9 வீதியில் இடம் பெற்ற வீதி விபத்தில் ஒருவர் பலி; இருவருக்குக் காயம்.

* யாழ்ப்பாணத்திற்கு ஆசிய உதைபந்தாட்டச் சம்மேளனத்தின் உபதலைவர் மணிலால் பெர்னாண்டோ விஜயம்.

* லெப்.கேணல் கௌசல்யன் படுகொலை செய்யப்பட்டமைக்கு ஐ.நா.செயலாளர் நாயகம் கொபிஅனான் கண்டனம் தெரிவித்தமைக்கு சிறிலங்கா அரசு வன்மையாகக் கண்டிப்பு.

* சுவீடன் சர்வதேச அபிவிருத்திக்கான அமைச்சரை கொழும்பில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் சந்தித்தனர்.

## 18.

* மூதூரில் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளைச் சந்தித்த அரசியல்துறைப்பொறுப்பாளர் அரசாங்கத்தின் ஏமாற்று நடவடிக்கைகளைத் தொடர்ந்தும் பார்த்துக்கொண்டிருக்க முடியாதென தெரிவிப்பு.

* மட்டக்களப்பிற்குச் சென்றிருந்த தமிழீழ அரசியல்துறைப்பொறுப்பாளர் உள்ளிட்ட புலிகளின் முக்கியஸ்தர்கள் கிளிநொச்சி திரும்பினர்.



* செம்மணி மனித எலும்புக் கூடு குறித்த வைத்திய அறிக்கை கொழும்பு நீதிமன்றத்தில் சமர்ப்பிப்பு.

## 19.


* யாழ்.பல்கலைக்கழக மாணவர்களின் நெஞ்சு கனக்கும் நினைவுகள் கவிதைத் தொகுப்பு நூல்வெளியீட்டு விழா கைலாசபதி கலையரங்கில் இடம் பெற்றது.

* அம்பாறை மாவட்டம் "உடும்பன்குளம்" இனப்படுகொலையின் 19 ஆவது ஆண்டு நினைவு நாள் திருக்கோவில் பிரதேசத்தில் உணர்வுபூர்வமாகக் கடைப்பிடிக்கப்பட்டது.

* சாவகச்சேரியில் இடம் பெற்ற வீதிவிபத்தில் ஒருவர் பலி.


## 20.

* சுனாமித் தாக்கத்திற்குள்ளான ஆசிய நாடுகளுக்கான தமது சுற்றுப்பயணத்தை மேற்கொண்ட அமெரிக்காவின் முன்னாள் சனாதிபதிகளான ஜோர்ஜ் புஷ், பில்கிளின்டன் சிறிலங்கா விஜயம். சனாதிபதி சந்திரிகாவைச் சந்தித்தனர்.



* வெலிக்கந்தப் பிரதேசத்தில் இனம் தெரியாதோர் மேற்கொண்ட துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் ஒருவர் பலி.

* அமெரிக்க முன்னாள் சனாதிபதிகள் பில் கிளின்டன், எச்.டபிள்யூ புஷ் ஆகியோரின் வருகைக்கு முன்பு கொழும்பு துறைமுகத்துக்கு வருகை தந்த அமெரிக்காவின் புளூறிட்ஜ் கப்பல்.



# சுனாமியால் பாதிப்புற்றுள்ள உறவுகளுக்கு உதவ

# றொறன்ரோவில் இசை விழா நிகழ்வு

சுனாமியால் பாதிக்கப்பட்டுள்ள உறவுகளுக்கு உதவுவதற்காக கனடா றொறன்ரோவில் நடை பெற்ற இசைநிகழ்வில் 29 ஆயிரம் கனேடிய டொலர்கள் திரட்டப்







பட்டது.

றொறன்ரோ சீடாபரே கல்லூரி கலையரங்கில் அண்மையில் நடை பெற்ற இந்நிகழ்வில் 25 ஆயிரம் கனேடிய டொலர்கள் திரட்டுவதாக எதிர்பார்க்கப்பட்டிருந்தது. எனினும் நிகழ்வின் இறுதியில் 29182 கனேடிய டொலர்கள் சேகரிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்த மேடை சுனாமிக்காக ஒழுங்கு செய்யப்பட்டபடியால் சுனாமிக்காக இசையமைக்கப்பட்ட பாடல்களும் மேடையில் பாடப்பட்டது. கனடாவின் பல பாகங்களிலிருந்தும் பாடகர்கள் வந்து பாடினர். மேடை நிகழ்ச்சிகளை கலைஞர் மனோரஞ்சிதம் செல்வகுமார் நெறிப்படுத்தினார்.

மேடையில் இசை வழங்கிய கலைஞர்களை இசையமைப்பாளர் பயாஸ் சவாஜீர் வழி நடத்தினார். பிரபல பாடகர் வர்ண ராமேஸ்வரனோடு கேரளக் குயில் சிந்து மோகன் இசைக்கு ஏது எல்லையின் வடிவங்களை பாடினர். சுகலியா, நிரூபன், தர்சினி கோபி, நிமால் என்பவர்கள் ராகங்களில் அமைந்த மெல்லிசை வடிவங்களைப் பாடினார்கள்.

ஹரிபாஸ்கர், நடா ஜெயதேவன், எலிசபெத் மாலினி, ஜூட்சன் சூசைதாசன், செந்தூரன், ஈஸ்வரன் என்பவர்கள் சுனாமிக்காக இசையமைக்கப்பட்ட பாடலைப் பாடினார்கள்.

இறுதியில் நல்லதோர் வாத்திய விருந்துடன் நிகழ்ச்சி முடிவுற்றது. இதனைத் தனது சொந்தச் செலவில் தமிழ் சமூகப்பற்றாளர் இசையரங்க இயக்குனர் வைரமுத்து சொர்ண லிங்கம் ஒழுங்கு செய்திருந்தார். இசையரங்கத்தின் அடுத்த நிகழ்ச்சி மே மாதம் 22 ஆம் திகதி நடை பெற இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்கக் கடற்படை அதிகாரிகள் சிறிலங்கா கடற்படைத் தளபதி சந்திப்பு

அமெரிக்க லூறிச் கடற்படைக் கப்பலில் சிறிலங்கா வந்துள்ள அந்நாட்டு கடற்படை அதிகாரிகள் கடற்படைத் தளபதி வைஸ்ட் அட்மிரல் தயா சந்தகிரியை நேற்றுமுன்தினம் காலை சந்தித்தனர்.

கொழும்பிலுள்ள கடற்படைத் தலைமையகத்தில் இச்சந்திப்பு இடம் பெற்றது. இதன் போது அமெரிக்கக் கடற்படை கப்பலின் பிரதான கட்டளை அதிகாரியான மார்க் பொய்ட்டுக்கும் சிறிலங்கா கடற்படைத்தளபதிக்குமிடையில் விசேட கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

கடற்படைத் தலைமையகத்திலுள்ள விருந்தினர் நினைவுப் பதிவேட்டில் மார்க் பொய்ட் தலைமையிலான கடற்படை அதிகாரிகள் கையொப்பமிட்டனர். இந்தச் சந்தர்ப்பத்தில் கடற் படைத் தளபதி தயாசந்தகிரி ,மார்க் பொய்ட் ஆகியோர் நினைவுச் சின்னங்களை பரிமாறிக் கொண்டனர்.

# ஜே.வி.பி. – சுதந்திரக் கட்சி தொழிற்சங்க உறுப்பினர்களிடையே கைகலப்பு

சிறிலங்காவில் இடம்பெற்ற தொடருந்து பணிப் புறக்கணிப்பின் போது ஜே.வி.பியின் தொழிற்சங்க உறுப்பினர்களுக்கும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி தொழிற்சங்க உறுப்பினர்களுக்கும் இடையில் கைகலப்பு இடம்பெற்றுள்ளது.

2,500 ரூபா சம்பள உயர்வு கோரி மேற்கொள்ளப்பட்ட இந்த பணிப்புறக்கணிப்புக்கு ஜே.வி.பி உறுப்பினர்கள் ஆதரவளிக்காமையே இதற்கான காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# சட்ட விரோத ஆயுதங்கள் ஒப்படைப்பு விபரம் திரட்ட முடிவு

(கொழும்பு)

அரசாங்கம் அறிவித்துள்ள பொது மன்னிப்புக் காலத்திற்குள் ஒப்படைக்கப்பட்ட சட்ட விரோத ஆயுதங்கள் தொடர்பாக தகவல்களை இம் மாத இறுதிக்குள் பெற்றுக் கொள்ள மக்கள் பாதுகாப்புச் சட்டம் சமாதானம் தொடர்பான அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

சகல பொலிஸ் நிலையங்கள் மாவட்ட மற்றும் பிரதேச செயலாளர் அலுவலகங்கள் என்பவற்றிற்கு இது தொடர்பாக சுற்று நிருபம் மூலம் அறிவித்துள்ளதாக அமைச்சின் மேலதிகச் செயலாளர் சந்திர ஏக்க நாயக்க கூறினார்.

பொது மன்னிப்புக் காலத்திற்குள் நாட்டின் பல பாகங்களிலும் சட்ட விரோத ஆயுதங்கள் கையளிக்கப்பட்டுள்ளதாக அமைச்சு தெரிவித்துள்ளது.

# இலங்கையில் மூன்று இலட்சத்திற்கும் அதிகமானோர் வேலையற்றவர்கள்!

(கொழும்பு)

இலங்கையில் வேலையற்றவர்களின் எண்ணிக்கை மூன்று இலட்சத்திற்கும் அதிகம் என உலக தொழிலாளர் அமைப்பு தெரிவித்துள்ளது. இது தொடர்பாக உலக தொழிலாளர் அமைப்பின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி குயொடியா கன்யாட் . கருத்து வெளியிடும் போது . இப்போது காணப்படும் வேலையற்ற பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு அரசாங்கம் மக்களுக்கு உதவி புரிய வேண்டும்.

ஆனால் அந்த உதவிகள் திட்டமிட்டமுறையில் மேற்கொள்ளப்பட வேண்டும். அவர்களுடைய சுய முயற்சியில் அவர்கள் எழுந்து நிற்கும் வகையில் இந்த உதவிகள் அமையவேண்டும். தொடர்ந்தும் நிவாரணங்களிலும் அரச உதவிகளிலும் தங்கியிருக்கும் நிலைமாற்றப்படவேண்டும் என்றார்.

இதற்கிடையில் இலங்கையின் தொழிலாளர் சட்டத்தினை மாற்றி அமைப்பதற்கான சட்ட மூலம் ஒன்று நேற்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. இதற்கமைய தனியார் துறையை சேர்ந்த ஊழியர் ஒருவர் சேவையில் இருந்து நீக்கப்படுவரானால் 60 மாதங்களுக்கான சம்பளப் பணத்தினை நட்ட ஈடாக வழங்க வேண்டி ஏற்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 2004இல் போதைப் பொருள் தொடர்பான குற்றச்சாட்டில் 11846 பேர் கைது!

2004 சனவரி 1 ஆம் திகதி முதல் டிசம்பர் 31 ஆம் திகதி வரையான ஒரு வருடகாலப் பகுதியில் போதை வஸ்து குற்றச்சாட்டு தொடர்பில் 11846நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக சிறிலங்கா பொலிஸ் தரப்புத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

பொலிஸ் போதைப் பொருள் தடுப்புப்பிரிவு சுங்க திணைக்களம் விமான நிலைய போதைப் பொருள் தடுப்புப் பிரிவு கடற்படை போதைப் பொருள் தடுப்புப்பிரிவு ஆகிய பிரிவுகள் மூலம் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (32)


# S.L.A.S பயிற்சி வகுப்பு

இடம் :- கமநல அபிவிருத்தித் திணைக்களம்,
பருத்தித்துறை வீதி, முத்திரைச் சந்தி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

திகதி :- 26-02-2005 தொடக்கம்
27-02-2005 வரை

கட்டணம் :- ரூபா 600/=
(ஒருவருக்கு ஒரு நாளைக்கு மட்டும்)
ரூபா 1200/= (ஒருவருக்கு இரண்டு நாள்களுக்கும்)

பாடக்குறிப்புகள், பாடநூல்கள் இலவசம்.

சிரேஷ்ட திறமை வாய்ந்த S.L.A.S அதிகாரிகளினால் மேற்படி பயிற்சி வகுப்பு நடத்தப்படுவதால் இச்சந்தர்ப்பத்தைத் தவறவிடாதீர்கள்.

**Facilitators:**

01) திரு.V.S.வேதநாயகம்
02) திரு.K.பரந்தாமன்
03) திரு.K.தெய்வேந்திரம்

குறிப்பு:- மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே அனுமதி வழங்கப்படவிருப்பதால் பதிவிற்கு முந்துங்கள்.

தொடர்பு: இணைப்பாளர்,
கமநல அபிவிருத்தி திணைக்களம், யாழ்ப்பாணம்.
T.P:024-2220695/021-2222396/024-2222362.

**TIME TABLE**

| Time | Date and Paper | |
|---|---|---|
| | 26-02-2005 | 27-02-2005 |
| 8.30 - 10.30 | IQ | Comprehension |
| 10.45 -12.45 | Case Study | IQ |
| 3.30 - 5.30 | Comprehension | Case Study |
| 5.45 - 8.00 | Case Study | IQ |

(சி.11353)


# தமிழீழ மாவட்ட நீதிமன்று - கிளிநொச்சி

வ.இல :- 240/04,
தன்மை :- பணம்,
பெறுமதி :-7771.74/=

**வழக்காளி**

கிளிநொச்சி கால்நடை
வளர்ப்போர் கூ.சங்கம்
அதன் தத்துவகாரர்,
திரு.தே.நீதிதேவன்

**எதிர்**

01) ஜெகவீரதேவர் செல்லம்மா,
268, விவேகானந்தநகர்,
கிளிநொச்சி.

02) ச.சாந்தமலர்,
இல:- 151, விவேகானந்தநகர்,
கிளிநொச்சி.

03) சூ.விவோர் ஜெந்தா,
இல:- 100, விவேகானந்தநகர்,
கிளிநொச்சி.

எதிராளிகள்

**பகிரங்க அறிவித்தல்**

மேற்குறித்த எதிராளிகளுக்கு,

மேற்படி வழக்கில், உங்களுக்கு எதிராக, வழக்காளியின் தத்துவகாரரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் உங்களுக்கு முறை நிறைவேற்றுனர் மூலம், அழைப்புக் கட்டளையைச் சேர்ப்பிக்க முயன்ற பொழுது நீங்கள் குறித்த முகவரியில் இல்லை என்று முறைநிறை வேற்றுனரின் அறிக்கையைத் தொடர்ந்து இப் பகிரங்க அறிவித்தல் உங்களுக்கு எதிராக விடப்படுகிறது. இப் பகிரங்க அறிவித்தல் வெளியாகி 15 நாட்களுக்கிடையில், நீங்களோ அல்லது உங்களது சார்பில் அக்கறையுடையவர்களோ மன்றில் தோன்றி சட்டப்படியான நடவ டிக்கைகளை மேற்கொள்ள ஆவணசெய்யவேண்டும் என்றும், தவறும் பட்சத்தில் உங்களுக்கு எதிராக ஒருமுக விளக்கம் நடாத்தி தொடர் சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை இதனால் வெளிப்படுத்தி இப்பகிரங்க அறிவித்தல் விடப்படுகின்றது.

இந்த 2005 ஆம் ஆண்டு, 02 ஆம் மாதம், 18 ஆம் திகதி

வரைபு:- "மன்றின் கட்டளைப்படி"

வழக்காளி சட்டவாளர்
திரு.தா.இ.குலசங்கர்,
இரத்தினபுரம் வீதி,
கிளிநொச்சி.

பதிவாளர்
தமிழீழ மாவட்ட நீதிமன்று,
கிளிநொச்சி.

(சி.11350)

# காஷ்மீரில் 12 அடி உயரத்திற்கு பனிப்பொழிவு 200 வீடுகள் உடைந்து பனியில் மூழ்கியுள்ளன

## உயிரிழந்தோர் 130 ஆக உயர்வு 100 பேரைக் காணவில்லை

(புதுடில்லி)

காஷ்மீரில் கடுமையான பனிப்பொழிவில் சிக்கி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 130 ஆக உயர்ந்துள்ளது.

200 வீடுகள் உடைந்து வீழ்ந்து பனியில் மூழ்கியுள்ளன. நூறுபேர் காணாமல் போயுள்ளனர். காஷ்மீர் மாநிலத்தில் தொடர்ந்து கடுமையாக பனிபொழிந்து கொண்டிருக்கிறது. எங்கு பார்த்தாலும் வெள்ளைவெளேரென்று பனிமயமாகக் காட்சி அளிக்கிறது. வீடுகள் மரம், செடி, கொடிகள் மீது பனி படர்ந்து விடுகிறது.

இந்த நிலையில் நேற்று முன்தினம் ஸ்ரீநகர் பகுதியில் பனிக்கட்டிகள் சரிந்து விழுந்தன. அவை பனிமலை ஓரத்தில் அமைக்கப்பட்டு இருந்த மரவீடுகள் மீது விழுந்தன. இதனால் வீடுகளும் உடைந்து பனியோடு பனியாக மூழ்கின. இது போன்ற விபத்துக்களால் சுமார் 130 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். 100 பேரைக் காணவில்லை. அவர்கள் பனி மலைக்குள் மூழ்கி இருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது. நேற்று முன்தினம் 26 குழந்தைகள், 18 பெண்கள் உட்பட 66 சடலங்கள் மீட்கப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர். பனிக்குள் அமுங்கிக் கிடந்த 20 பேர் காப்பாற்றப்பட்டதாகவும் அவர்கள் கூறினர். பூஞ்ச் மாவட்டம், தோடா மாவட்டம் ஆகியவற்றில் இந்தப் பாதிப்புக்கள் அதிகம் ஏற்பட்டன. கடந்த 3 நாட்களாக தினமும் சராசரி 12 அடி உயரம் அளவுக்கு பனிப்பொழிவு ஏற்பட்டு வருவதாக சொல்லப்படுகிறது. கடந்த 48 மணி நேரத்தில் 200 வீடுகள் பனியின் பாரம் தாங்காமல் உடைந்து பனிக்குள் விழுந்து மூழ்கிப்போனதாக பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்தனர். காஷ்மீர் அரசாங்கம் இந்த விபத்துக்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவதற்காக ரூ ஒரு கோடியே 60 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. உயிர் இழந்தவர்கள் ஒவ்வொருவரின் குடும்பத்துக்கும் தலா ரூ.50 ஆயிரம், காயம் அடைந்தவர்களுக்கு தலா ரூ.25 ஆயிரம் வழங்கவும் அரசு உத்தரவிட்டுள்ளது.


ஆங்கிலம் பேச,எழுத,வாசிக்க
றஜித் இங்கிலிஸ்
புதிய பிரிவு ஆரம்பம்

காலம்:- 23.02.2005 புதன் கிழமை
நேரம்:- மாலை 5.30
இடம்:- அரசவைத்திய சாலை அருகில், முல்லை வீதி, புதுக்குடியிருப்பு

(5743)


# அனைவரும் கல்வியறிவு பெறவேண்டும் பிரதமர் மன்மோகன் வற்புறுத்தல்

(புதுடில்லி)

இந்தியாவிலுள்ள அனைவரும் கல்வி அறிவு பெறவேண்டும் என்று டில்லியில் நடந்த கூட்டத்தில் பிரதமர் மன்மோகன் சிங் வலியுறுத்தியுள்ளார்.

உலகில் 80 சதவீதம் கல்வியறிவு பெறாத எந்த நாடும் பொருளாதாரத்தில் முன்னேறியதாக வரலாறே இல்லை. எனவே இந்தியாவை நவீனபொருளாதார நாடாக உருமாற்ற வேண்டும் என்றால் அனைவருக்கும் ஆரம்பக்கல்வி அளிப்பது அவசியம் என பிரதமர் மேலும் தெரிவித்துள்ளார்.

# ஆகாஷ் ஏவுகணை வெற்றிகரமாக பரிசோதனை

(புதுடில்லி)

முற்றிலும் இந்தியாவிலேயே வடிவமைக்கப்பட்ட மத்தியதர 'ஆகாஷ்' ஏவுகணையின் சோதனை நேற்று முன்தினம் வெற்றிகரமாக நடத்தப்பட்டது.

ஒரிசா மாநிலம் பாலாசூர் அருகே கடற்பகுதியில் இருக்கும் சந்திப்பூர் ஏவுகணை தளத்திலிருந்து ஆகாஷ் ஏவுகணை விண்ணில் செலுத்தி பரிசோதிக்கப்பட்டது. 'லக்ஷயா' எனப்படும் ஆளில்லாத இலகுரக விமானம் உருவாக்கிய இலக்கை இந்த ஆகாஷ் ஏவுகணை தாக்கியது. நவீன தொழில்நுட்பத்துடன் கூடியதும், பல்வேறு இலக்குகளை குறிபார்த்து தாக்கக் கூடியதுமான இந்த ஆகாஷ் ஏவுகணை, முற்றிலும் உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்டது. தரையிலிருந்து விண்வெளியில் உள்ள இலக்கை நோக்கிப் பாய்ந்து சென்று தாக்கும் வல்லமை பெற்றது. இந்த ஏவுகணை 25 கி.மீ.தூரம் வரை சென்று தாக்கும் திறன் கொண்டது. 15 கி.மீ. தூரத்திலுள்ள இலக்கை நிர்மூலமாக்கி விடும். 700 கிலோ எடை கொண்ட இந்த ஏவுகணை 60 கிலோ எடை கொண்ட ஆயுதங்களை எடுத்துச் செல்லும் திறன் கொண்டது.


இங்கே வெட்டவும்




நெஸ்பிறே பால்மா வாங்குங்கள்!

பால்மா பிரியர்களுக்கு கிளிநொச்சி அம்மன் களஞ்சியம் வழங்கும்

மாபெரும் பரிசுப்போட்டி

நீங்கள் செய்யவேண்டியது இதுதான்!

நெஸ்பிறே 400கிராம் பைக்கற்றின் மேல்ப்பகுதியை வெட்டிஅதன் பின்புறம் பெயர் விலாசம் ஆகியவற்றை எழுதிதினமும் கீழ்வரும் விலாசத்திற்கு அனுப்புவதன் மூலம் மாதத்தில்ஒவ்வொரு திங்கட்கிழமையும் ஒரு ஏசியா ஈருருளிக்கு உரிமையாளராகுங்கள். இப்போட்டி பெப்ரவரி மாதம் 28ஆம் திகதி முடிவடையும் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படும் வெற்றியாளரின் பெயர் விபரம் அடுத்து வரும் நாளிதழில் பிரசுரிக்கப்படும்.

வன்னிப்பகுதிக்கான முகவராண்மை பெற்றவர்கள்:

அம்மன் களஞ்சியம்

யாழ்சாலை, கிளிநொச்சி. தொ.பே:021-228 5852,5077

அம்மன் களஞ்சிய ஊழியர்கள் இப்போட்டியில் பங்குபற்றமுடியாது.

கிழமை தோறும் ஒரு ஏசியா ஈருருளி உரிமையாளராகுங்கள்!



அனுப்பவேண்டிய முகவரி:
நெஸ்பிறே பரிசுப்போட்டி
ஈழநாதம்
யாழ்சாலை, கிளிநொச்சி.

இப்போட்டியில் வன்னிப்பகுதியைச் சேர்ந்தவர்கள் மட்டுமே பங்குபற்ற முடியும்.

(சி-11254)






எந்நேரத்திலும் உங்கள் தேவைகளை இனம் கண்டு நிறைவு செய்து தரும்
உங்கள் பாண்டியனின் இன்னுமொருபேரன் பன்னெறி ஆற்றல் கொண்டவனாக மாறிவிட்டான்.
ஏன் தெரியுமா?

கடந்த காலங்களில் ஊர்தி உதிரிகளை மட்டும் வழங்கி வந்தவன் இனி...


கனரக ஊர்திகளின் உதிரிகளை உடன் தருவான்
(டோசர்,வக்கோ,JCB, மோட்டர் கிறைண்டர்)

ஆலைப்பொறிகளின் உதிரிகளை உடன் தருவான்

புத்தம் புதிய உழுபொறிகள், இரு சில்லு உழுபொறிகள் என்பனவற்றை உடன் தருவான்

அம்மட்டோ!!!
கண்ணிமைக்கும் நேரத்தில் ஆலைப்பொறிகளை உடன் பெற்றுத்தருவான்


இந்தப்பேரன் வேறு யாருமல்லன்




பாண்டியன் ஊர்தி உதிரிகள் விற்பனைப்பகுதி

ஏ-9 நெடுஞ்சாலை "குறைந்த பணச்செலவு மிகுந்த மனநிறைவு" கிளிநொச்சி (சி-11454)

# ஹெய்டன் சிறப்புத் துடுப்பாட்டம்; பந்துவீச்சில் சைமன்ஸ் கலக்கல்
# இரண்டாவது போட்டியில் அவுஸ்திரேலியாவுக்கு அபார வெற்றி




அவுஸ்திரேலியா-நியூசிலாந்து அணிகளுக்கிடையில் நேற்று நடைபெற்ற இரண்டாவது ஒரு நாள் போட்டியில் அவுஸ்திரேலியா 106 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி நியூசிலாந்தில் சுற்றுப் பயணம் செய்து விளையாடி வருகிறது.இருஅணிகளிடையே ஐந்து ஒரு நாள் போட்டி மற்றும் மூன்று டெஸ்ட் போட்டி கொண்ட தொடர் நடைபெறுகிறது.

இதில் வெலிங்கடனில் நடந்த முதல் ஒரு நாள் போட்டியில் அவுஸ்திரேலியா வெற்றி பெற்றது. இந்த நிலையில் இரு அணிகளுக்கிடையேயான இரண்டாவது ஒரு நாள் போட்டி நேற்று கிறிஸ்ட்செர்ச்சில் பகலிரவு ஆட்டமாக நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற நியூசிலாந்து, அவுஸ்திரேலியா வைத்துடுப்பாடப் பணித்தது.


தொடக்க ஆட்டக்காரர்களாக கில்கிறிஸ்ட்டும்,ஹைடனும் களமிறங்கினார்கள். கில் கிறிஸ்ட் ஓடடம் ஏதும் எடுக்காத நிலையில் டபியின் பந்தில் ஆட்டமிழந்தார். இரண்டாவதுவிக்கெட்டுக்கு ஜோடியாக பொண்டிங் இணைந்தார். இருவரும் அடித்து ஆடி ஓட்டங்களைச் சேர்த்தனர்.

பொண்டிங் அரைச் சதத்தை கடந்தார். அவர் 57 பந்தில் ஆறு பவுண்டரி, இரண்டுசிக்ஸர் உட்பட 53 ஓட்டங்களைப் பெற்றார். அடுத்து மார்ட்டின் ஹைடனுடன்



சேர்ந்தார். இருவரும் நியூசிலாந்து வீரர்களின் பந்து வீச்சை அதிரடியாக ஆடி ஓட்டங்களைக் குவித்தனர்.

சிறப்பாக ஆடிய ஹெய்டன் சதமடித்தார். 53 ஓட்டங்கள் எடுத்த நிலையில் மார்டினை மெக்மிலன் ரன்அவுட்முறையில் ஆட்டமிழக்கச் செய்தார்.



சிறிது நேரத்தில் ஹெய்டனும் ஆட்டமிழந்தார். அவர் 124 பந்துகளில் 12 பவுண்டரி, இரண்டு சிக்ஸர் உட்பட 114 ஓட்டங்கள் எடுத்தார்.

அடுத்து களம் இறங்கிய சைமன்ஸ் 13 ஓட்டமும், கிளார்க் 23 ஓட்டமும் எடுத்து ஆட்டமிழந்தனர். அந்த அணியின் புது முகவீரரான குசே 32 ஓட்டம் எடுத்தார். முடிவில் அவுஸ்திரேலிய அணி ஆறு விக்கெட் இழப்பிற்கு 314 ஓட்டங்கள் எடுத்தது. நியூசிலாந்து தரப்பில் மில்ஸ் இரண்டு விக்கெட்டும்,டபி, கெய்ன்ஸ் தலா ஒரு விக்கெட்டும் கைப்பற்றினர்.

315 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற கடினமான இலக்குடன் நியூசிலாந்து களமிறங்கியது. அந்த அணியின் விக்கெட்டுக்கள் ஆரம்பத்திலேயே சரியத் தொடங்கியது. தலைவர் பிளமிங் (01)அஸ்லே (3),சின்கிளேயர்(15), மார்ஷல்(16), ஓட்டங்களை முறையே பெற்று ஆட்டமிழந்தனர். இதனால் நியூசிலாந்து 49 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டை இழந்தது.

அடுத்துக் களமிறங்கிய கெய்ன்ஸ் 22 ஓட்டமும்,மெக்கலம் 20 ஓட்டமும் எடுத்தனர். 8-ஆவது விக்கெட்டுக்கு களம் இறங்கிய விட்டோரி அதிரடியாக ஆடி அரைச் சதமடித்தார். அவர் 83 ஓட்டம் எடுத்த நிலையில் ஆட்டமி



ழந்தார்.முடிவில் அந்த அணி 40.4 ஓவரில் 208 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டையும் இழந்து 106 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. அவுஸ்திரேலியா தரப்பில் சைமன்ஸ்3விக்கெட்டும், பிரெட்லீ, மெக்ராத்,கில்லெஸ்பி ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர். 3 ஆவது ஒரு நாள் போட்டி 26 ஆம் திகதி ஆக்லாந்தில் பகலிரவாக நடைபெறவுள்ளது.

## சவாலாக இருப்பார் ராவிட்




இந்தியாவுக்கு எதிரான தொடரில் ராவிட் மிகப்பெரிய சவாலாக விளங்குவார் என பாகிஸ்தான் சுழற்பந்து வீச்சாளர் டேனிஷ் கனேரியா தெரிவித்துள்ளார்.

இந்திய அணியின் துருப்புச் சீட்டாக ராவிட் இருக்கிறார். தூண் போல விளங்கும் அவரது விக்கெட்டைக் கைப்பற்றுவதென்பது கடினமான காரியம். எனினும் அவரை விரைவில் ஆட்டமிழக்கச் செய்வோம்.

இந்தத்தொடரை நாங்கள் நம்பிக்கையுடன் எதிர்கொள்கிறோம். எங்களது பந்து வீச்சாளர்களுக்கு ராவிட், மற்றும்முன்னணி துடுப்பாட்ட வீரர்கள் பெரும் சவாலாக இருப்பார்கள்.

இந்தியாவில் நடைபெற்ற போட்டிகளில் இதுவரை நான் ஆடியதில்லை. அவுஸ்திரேலியாவுக்கெதிரான டெஸ்ட் தொடரில் தோல்வி அடைந்தோம். அந்தத் தொடர் மிகக் கடுமையாக இருந்தது. இந்தியத் தொடரில் சிறப்பாக ஆடி வெற்றிபெறுவோம் என்று அவர் கூறினார்.

## சிம்பாப்வே தேசிய அணியில் இணைய அன்டிபிளிக்னட் புதிய ஒப்பந்தம்



சர்ச்சைக்குரிய முன்னாள் சிம்பாப்வே கிரிக்கட் வீரர்களில் ஒருவரான சகல துறைவீரர் அன்டிபிளிக்னட் தேசிய அணியில் இணைவதற்கு புதிய ஒப்பந்தம் மொன்றில் கைச்சாத்திடயிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. அந்த வகையில் மீண்டும் அணிக்குத் திரும்பும்முதல் வீரர்அவராவார்.

சர்வதேச போட்டிகளில் சிம்பாப்வேக்காக ஆட தான் மிக ஆவலுடன் இருப்பதாகவும் தனது திறமையை வெளிக்காட்டி தரவரிசையில் முன்னேறுவதற்கு விரும்புவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.


கடந்த 10 மாதமாக தஸ்மெனியாவில் நடைபெற்ற உள்ளூர்ப்போட்டிகளில் தனது செல்வாக்கு பலிக்காததையடுத்து நாடுதிரும்பினார். அங்கு அவர் காயங்காரணமாக ஒரே ஒரு முதல்தர போட்டியில் மட்டுமே பங்கெடுத்துள்ளார்.

26 வயதான பிளிக்னட் 51டெஸ்ட்போட்டிகளில் ஆடி 32,62 என்ற சராசரியை பெற்றுள்ளார்.15 போட்டிகளில் அவரது பந்து வீச்சு சராசரி24.53 ஆகும். இவ்வாரத்தில் நடைபெறும் பங்களாதேஷ் ஏ. அணியுடனான போட்டியில் விளையாடும் சிம்பாப்பே ஏ.அணியில் இவர் இடம் பிடிக்கவுள்ளார்.

எனினும் தற்போது தென்னாபிரிக்காவில் சுற்றுப்பயணம் மேற்கொள்ளும் டண்டர் தைபுவின் அணியில் இணைய மாட்டார்.

அத்துடன் ஏனைய வீரர்களும் நிபந்தனையின்றி தேசிய அணியில் இணைவதற்கான இவரின் தீர்மானம் பற்றி பேசப்படுவதாக சிம்பாப்வே கிரிக்கெட்சபை தெரிவித்துள்ளது.

## அவுஸ்திரேலிய அணியை வெற்றிகொள்ளும் மனோதிடம் இங்கிலாந்து வீரர்களிடமில்லை




எதிர்வரும் ஜுலைமாதம் நடைபெறவுள்ள ஆஸஸ் தொடரில் அவுஸ்திரேலியாவை வெல்லும் வாய்ப்பு இங்கிலாந்து வீரர்களுக்கு இருப்பினும் அவர்களிடம் அதற்கான மனோதிடம் குறைவாகவே இருப்பதாக அவுஸ்திரேலியாவின் முன்னாள் முன்னணி துடுப்பாட்ட வீரர் மார்க்வோ தெரிவித்துள்ளார்.

எனினும் இங்கிலாந்தின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளரான பீற்றர் லிவர் மைக்கல்வோனின் தலைமையிலான வீரர்கள் அவுஸ்திரேலியாவை திணறவைப்பார்கள் என்று பி.பி.சி. செய்தி நிறுவனத்திடம்தெரிவித்துள்ளார்.

மேலும் வோனின், தொடரை வெல்லும் எண்ணம் நெருங்கி வருவதாகவும் ஆனால்அதனைக் கையாள்வது அவர்களின் பயிற்சியிலேயே தங்கியிருக்கிறது என்றும் அவர் கூறியிருக்கிறார். கடந்த 2002இல் நடைபெற்ற இறுதி ஆஸஸ் தொடரில் ஆடிய மார்க்வோ 128 டெஸ்ட்போட்டிகளில் ஆடி 8,029 ஓட்டங்களைப் பெற்றுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கும் போது, இந்தத் தொடர் இங்கிலாந்து வீரர்களுக்கு ஒரு பலப்பரீட்சையாகுமெனவும் ஒருநாள் போட்டிகளில் அவர்களுக்கு நல்ல பலன் கிடைக்கலாமெனவும் கூறியுள்ளார்.

எனினும் லிவர்,முன்னாள் பந்து வீச்சு பயிற்றுநர் ஒருபோதும் இல்லாதவாறு தற்போதைய அணிசிறந்து விளங்குவதாக தெரிவிக்கிறார். ஸ்ரீவ் ஹார்மிசன்,அன்ருபிளிண்டொப் ஆகியோரின் பந்துவீச்சு குறிப்பிடத்தக்கவாறு இருப்பதாகவும் இந்த வாய்ப்பு அவர்களுக்கு வெற்றியைத்தரும் எனவும் கூறுகிறார்.

இதற்கிடையில் அவுஸ்திரேலியாவின் 35வயதான டரன்லீமன் அணியிலிருந்து நீக்கப்படுவார் என தான் எதிர்பார்ப்பதாகவும் மார்க்வோ குறிப்பிடுகிறார்.




லண்டனில் நடந்த 'எப்,ஏ கோப்பைக்கான கால்பந்து போட்டியில்,நொட்டிங்ஹாம் அணியின் ஜான் தாம்சன் (இடது) ஸ்பர்ஸ் அணியின் லெட்லேகிங் இருவரும் பந்தை தலையால் முட்டித்தள்ள முற்படுகின்றனர். இந்தப் போட்டி 1-1 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிந்தது.

## தென்னாபிரிக்க-சிம்பாப்வே ஒரு நாள் போட்டி 25 ஆம் திகதி



தைபு தலைமையிலான சிம்பாப்வே கிரிக்கெட் அணி தென்னாபிரிக்காவில் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளது. இரு அணிகள் இடையே இரண்டு டெஸ்ட் மற்றும் மூன்று ஒரு நாள் போட்டித் தொடர் நடைபெறுகிறது. முதலில் ஒரு நாள் போட்டித் தொடர் நடைபெறுகிறது.

இரு அணிகள் மோதும் முதல் ஒரு நாள் போர்ட்டி நாளை மறுதினம் ஜோகனஸ்பேர்க்கில் பகலிரவு ஆட்டமாக நடைபெறுகிறது. 2 ஆவது போட்டி27ஆம் திகதி டர்பனிலும், 3ஆவது போட்டி மார்ச்ச இரண்டாம் திகதி போர்ட் எலிசபத்தியிலும் நடக்கிறது. டெஸ்ட் போட்டி 4 ஆம் திகதி கேப்ட வுனில் தொடங்குகிறது.



## பாகிஸ்தானுக்கு எதிரான போட்டி இந்திய மண்ணில் சவாலானது




இந்திய மண்ணில் பாகிஸ்தானுடன் விளையாடுவது சவாலாக இருக்கும் என்று சச்சின் டெண்டுல்கர் கூறியுள்ளார்.ஆனால் வேகப் பந்து வீச்சாளர் அக்தர் அணியில் இடம் பிடிக்காதது அந்த அணிக்கு பெரிய தலைவலியை உண்டாக்கி உள்ளது. இதற்கிடையே முழங்கை வலி காரணமாக கடந்த இரண்டு மாதமாக ஓய்வு எடுத்த இந்திய நட்சத்திர ஆட்டக்காரர் டெண்டுல்கர் முழுக்குணம் அடைந்து திரும்பி இருக்கிறார். "பாகிஸ்தான் அணிக்கு எதிரான போட்டியில் ஆட தயார் நிலையில் இருக்கிறேன். வேகப்பந்து வீச்சாளர் அக்தர் பாகிஸ்தான் அணியில் இடம் பிடிக்காமல் போனது வருத்தமான விடயம் ஆனால் இந்த ஒரு விடயம் மட்டும் இந்தியாவுக்கு வெற்றியை கொடுத்து விடாது. இந்திய மண்ணில் பாகிஸ்தான் அணி பல முறை சாதித்துள்ளது. எனவே எப்பேற்பட்ட சூழ்நிலையிலும் அவர்கள் இந்திய அணிக்கு சோதனை கொடுப்பார்கள். டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் 300 ஓட்டம் எடுக்கவில்லை என்ற கவலை எனக்கு கொஞ்சமும் கிடையாது எனவும் தெரிவித்தார்.




## விளையாட்டு

### பாடசாலைகளுக்கிடையிலான உடற்பயிற்சிப்போட்டி இன்று

வட்டக்கச்சி இராமநாதபுரம் மேற்கு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் நடைபெறவுள்ள பாடசாலை மட்டத்திலான உடற்பயிற்சிப் போட்டி இன்று நடைபெறவுள்ளது. இப்போட்டியில் ஏ9 வீதிக்கு கிழக்குப் புறமாகவுள்ள பாடசாலைகளின் எட்டிற்கு மேற்பட்ட அணிகள் கலந்து கொள்ளவுள்ளன. இப்பாடசாலை அணிகளுக்கு இடையிலான போட்டியில் முதல் மூன்று இடங்களை பெறும் அணிகள் கோட்ட மட்ட போட்டிக்கு தெரிவுசெய்யப்படும்

(12)

## சிந்தனைக்கு



எமது தேசிய வாழ்வின் சகல பரிமாணங்களிலும் வியாபித்து நிற்கும் ஒரு வரலாற்று இயக்கத்திலிருந்து கலைஞர்களும் அறிஞர்களும் அந்நியப் பட்டு நிற்கமுடியாது.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 23-02-2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham 23 ela @ yahoo. com

# அழுத்தம் பிரயோகிக்கப்படுமா?

சுனாமி பேரனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் விடயத்தில் சிறிலங்காவுக்கு உலக நாடுகள் மூன்று விடயங்களை முக்கியமாகத் தெரிவித்து வருகின்றன. ஒன்று வடக்கு-கிழக்கில் பாதிக்கப்பட்ட மக்களிற்கு உதவுவதில் புலிகளுடன் இணைந்து செயற்படுவதற்கான ஒரு பொறிமுறையை உருவாக்குதல் வேண்டுமென்பது. இரண்டாவது இந்த அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தேவையான அளவு உதவியை வழங்க அவை தயாராக இருக்கின்றன என்பது. மூன்றாவது. வழங்கப்படும் நிதி உரியவர்களுக்குச் சென்றடைய வேண்டும். அல்லாவிடின் இந்த நிதியுதவி நிறுத்தப்படுமென்பது. இந்த விடயங்களை சிறிலங்காவுக்கு உதவி வழங்கும் நாடுகளும், சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவ விரும்பும் மனித நேய அமைப்புக்களும் வலியுறுத்தத் தவறவில்லை.

இவற்றையே கொழும்பிற்கு விஜயம் செய்த முன்னாள் அமெரிக்க சனாதிபதிகளான பில்கிளின்டன், ஜோர்ஜ்புஷ் ஆகியோரும் வலியுறுத்தியிருக்கின்றனர்.

ஆனால், இவ்விடயங்களில் கவனம் செலுத்துவதற்கு சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா இதுவரை காலமும் எந்த முயற்சிகளையும் எடுக்கவில்லை என்றே கூறலாம். வடக்கு-கிழக்கு மாகாணங்களில் சுனாமியால் பாதிப்புற்ற மக்களிற்குதவ புலிகளுடன் இணைந்து செயற்படுவதற்கான பொறிமுறையை உருவாக்குவதில் சிறிலங்கா அரசாங்கம் பெரிய உற்சாகம் காட்டுவதாக இல்லை. தனது அரசியல் இலாபம் கருதி தம்முடன் இணைந்து செயற்பட புலிகள் முன்வந்திருக்கிறார்கள் என்று சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அடிக்கடி கூறி வருகின்றாரே தவிர புலி[illegible] இணைத்துக் கொள்வதற்கான நடவடிக்கைகளை அவர் மேற்கொள்வதாகத் தெரியவில்லை. ஆரம்பத்தில் அரசாங்கத்தினதும், விடுதலைப் புலிகளினதும் சமாதானச் செயலகங்கள் இம்முயற்சியில் ஈடுபட்டு வந்தபோதும் அது வெற்றியைத் தரவில்லை.

சுனாமிப் பேரனர்த்தம் ஏற்பட்டு இரண்டு மாதங்களை நெருங்கிக் கொண்டிருக்கின்றது. இதில் பாதிக்கப்பட்ட மக்களில் பெரும்பாலானோர் குடியிருப்புகள், உடமைகள், தொழில் உபகரணங்கள் அனைத்தையுமே பறிகொடுத்து நிற்கின்றனர். இவர்களுக்கான நிவாரண நடவடிக்கைகளில் ஏற்படும் தாமதம் அம்மக்களை விரக்தி நிலைக்குத் தள்ளத்தக்கதாகும். மேலும் புனர்நிர்மாணப் பணிகளை ஆரம்பித்தால்கூட அப்பணிகள் முடிவடைய நீண்ட காலம் எடுக்கக்கூடுமெனவும், இதற்கு ஆளணி வளப்பற்றாக்குறை முக்கிய தடையாக இருக்குமென்றும் கூறப் படுகிறது. இந்நிலையில், பணிகளை ஆரம்பிப்பதிலேயே தாமதம் ஏற்படுவது மேலும் மோசமான பாதிப் புக்களை விளைவிக்கும்.

இரண்டாவதாக, சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்கள் தமது வாழ் நிலைக்குத் திரும்ப உதவி புரிய உலக நாடுகளும் பல்வேறு அமைப்புக்களும் தயாராக உள்ள நிலையில், அரச இயந்திரத்தின் நடவடிக்கைகள் இதற்கு முட்டுக்கட்டையாக உள்ளன.

சிறிலங்கா அரச இயந்திரத்தின் செயற்திறன் மிகக் குறைந்ததாகும். அத்துடன் ஊழலும், மோசடிகளும் நிறைந்தது என்ற குற்றச்சாட்டு பல தரப்பாலும் முன்வைக்கப்பட்டிருக்கிறது. பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை தொடர்பிலேயே சிறிலங்காவின் அரச இயந்திரம் முரண்பாடான புள்ளி விபரங்களை வழங்கியது.

சிறிலங்கா அரசாங்கம் செயற்திறன் குறைந்ததெனவும் அதனுடன் பணியாற்றுவது மிகவும் கடினமானதெனவும் சுனாமி அனர்த்தத்தின் முன்பதாகவே பல வெளிநாட்டு அரசசார்பற்ற நிறுவனங்களும் சர்வதேசநிதி நிறுவனங்களும் கூடச் சுட்டிக்காட்டியதுண்டு.

இதேவேளை சிறிலங்கா அரசில் அரசியல் வாதிகளில் இருந்து அதிகாரிகள் வரையில் ஊழல் மோசடியில் திளைத்தவர்கள் என்பதும் உலகறிந்ததொன்று. எடுத்துக்காட்டாக அண்மையில் தென் மாகாணத்தில் மாகாணசபை அமைச்சர் ஒருவரின் உத்தியோக பூர்வ வாகனத்தில் சுனாமி நிவாரணப் பொருட்கள் கடத்தப்பட்டதை படங்களுடன் ஒரு பத்திரிகை வெளியிட்டிருந்தமை சுட்டிக் காட்டத்தக்கது. அடுத்ததாக தமிழர் தாயகப் பகுதியில் சுனாமியினால் பாதிக்கப்பட்டோருக்கு நிவாரணப் பொருட்களை உரிய முறையில் சம அளவில் பங்கிட்டு அளிக்க அரசாங்கம் இன்னமும் தயாராக இல்லை. அரசாங்கத்தின் கையில் பெரும் தொகை நிவாரண நிதி இருக்கின்றபோதும் அவற்றைப் பகிர்ந்தளிக்கவோ அன்றித் தமிழர் பகுதி புனர்நிர்மாணத்திற்குப் பயன் படுத்தவோ அரசாங்கம் தயாராக இல்லை.மறுவளமாக அரசு தமிழர் தாயாகத்தின் அழிவுகளை உலகின் கண்களிலிருந்து மறைத்து விடவே அக்கறை காட்டுகிறது.

இந்த வகையில் சிறிலங்காவிற்கு உதவும் சர்வதேச நாடுகளின் எதிர்பார்க்கைகள் எதனையும் அரசாங்கம் கவனத்திற்குட் படுத்தியதாக இல்லை. ஏதோ ஒரு விதத்தில் தட்டிக்கழித்து விடவே அது விரும்புகின்றது. இந்நிலையில் உதவி வழங்கும் சர்வதேச நாடுகள சிறிலங்கா அரசின் நடவடிக்கையில் திருப்தி கொள்ள வாய்ப்புக்கள் இல்லை. ஆனால் இதனை அடிப்படையாகக் கொண்டு இவ்உதவி வழங்கும் நாடுகள் எந்தளவிற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளப் போகின்றன என்பதே தமிழ் மக்களின் எதிர்பார்க்கையாகும் அதாவது உதவி வழங்கும் நாடுகளும் தமது அபிலாசைகளைத்துறந்து சிறிலங்கா அரசின் மீது அழுத்தத்தைப் பிரயோகிக்க முற்படுமா? என்பதே தமிழ் மக்களின் முன்னுள்ள கேள்வியாகவுள்ளது.

# கிளிநொச்சி மக்களின் மகஜர்களுக்கு தகுந்த பதில் பெற்றுத்தராவிடின் போராட்டம்

## -க.கா.குழுவுக்கு கிளி.அரச சா.நி. ஒன்றியம் தெரிவிப்பு

(அலுவலக செய்தியாளர்)

அரசாங்கத்தின் திட்டமிடப்பட்ட இனவாத செயல் களால் இராணுவக்கட்டுப்பாட்டுப் பகுதியில் வைத்து கொலை செய்யப்பட்ட மட்டு.அம்பாறை மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர்,அவருடன் சென்றி ருந்த போராளிகள்,மாமனிதர் சந்திரநேரு ஆகியோ ரது கொலையைக் கண்டித்து கிளிநொச்சி மாவட்டத் திலிருந்து அனுப்பப்பட்ட மகஜருக்கு தகுந்த பதிலை போர்நிறுத்த கண்காணிப்பு குழுபெற்றுத் தரா விட்டால் போர் நிறுத்த கண்காணிப்பு குழுவை செயற்பட விடாமல் ஆர்ப்பாட்டங்களை மேற் கொள்ளுவோமென கிளிநொச்சி மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் தலைவர் க.கணேசபிள்ளை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், எமது மாவட்டத்தி லிருந்து மேற்படி போராளிகளின் படுகொலையை கண்டித்து ஆர்ப்பாட்டங்கள்,கண்டனப்பேரணிகள் என மாறி மாறி நாடாத்தி, மகஜர்களையும் போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவிடம் கையளித்துள்ளோம்.

இவை சனாதிபதிக்கு கிடைக்கக்கூடியவாறும் அனுப்பியுள்ளோம். எமது பகுதியிலிருந்து ஒவ்வொரு அமைப்புக்கள் ஊடாகவும் தனித்தனி மகஜர்களை கையளித்திருக்கின்றோம். ஆனால் அதற்கு எந்தவித மான உடனடி நடவடிக்கைகளையும் அரசாங்கம் மேற்கொள்ளவில்லை. அத்துடன் போர்நிறுத்த கண் காணிப்புக் குழுவும் மௌனம் சாதித்து வருகின்றது. இது எமக்கு மிகுந்த வேதனையை தருகின்றது.

இந்தக் கொலைகளைப் போன்று எதிர்வரும் காலங்களிலும் நடைபெறக்கூடாது என்பதற்காகவே நாம் முனைப்புடன் பேரணிகளை மேற்கொண்டோம். மகஜர்களை கையளித்தோம். இனிமேலும் இப்படி ஒரு செயல் நடைபெறுமாக இருந்தால் அதற்குரிய பொறுப்பை போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவே ஏற்று கொள்ளவேண்டும்.

அத்துடன் வடகிழக்கு பகுதிக்ளில் சுனாமி அனர்த்தத் தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கென சர்வதேச சமூகம் அனுப்பிவைத்த உதவிகள் தமிழர் தாயகப்பகுதிக்கு உரிய முறையில் கிடைக்காமல் அரசாங்கம் மழுங்கடிப்புச் செய்வது மீண்டும் யுத்தத் திற்கு ஆயுதங்களை கொள்வனவு செய்கின்றதோ என்ற சந்தேகமும் ஏற்பட்டுள்ளது.

எனவே இவற்றிற்கு தகுந்த பதிலை கண்காணிப்புக் குழு பெற்றுத்தரவேண்டும், உடனடியாக விசாரணை மேற்கொள்ள வேண்டுமெனவும் அவர் தெரிவித் துள்ளார். இது தொடர்பான ஒரு அறிக்கையினையும் தாம் வெளியிடப்போவதாகவும் அவர் தெரிவித் துள்ளார். (கு)

# வவுனியா பொலிசாரால் பெண் உட்பட மூவர் கைது

(வவுனியா செய்தியாளர்)

வவுனியாவில் பல்வேறு குற்றச் செயல்களில் ஈடுப்பட்ட பெண் உட்பட மூவரை வவுனியா குற்றத் தடுப்பு பொலிசார் கைது செய்துள்ளனர்.

கசிப்பு உற்பத்தி. விற்பனை,கலகம் போன்ற குற்றச் செயல்களில் ஈடுபட்டு திறந்த பிடியாணை விதிக்கப் பட்டிருந்த இருவரையும் கசிப்பு விற்பனையில் ஈடுபட்ட பெண் ஒருவரையுமே குற்றத்தடுப்பு பொலிசார் கைது செய்துள்ளனர். இவர்கள் வவுனியா மாவட்ட நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கசிப்பு விற்பனையில் ஈடுபட்ட பெண்ணிடமிருந்து 8 போத்தல் கசிப்பு பொலிசாரால் கைப்பற்றப்பட்டதாக வவுனியா குற்றத்தடுப்பு பொலிசார் தெரிவித்துள்ளனர். (10)

### ஈராக்கில்...

இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளதாக அவரது உற்வினர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. ஈராக்கிற்கு இரண்டு நாட்கள் கடமைக்காக ஆரம்பத்தில் அனுப் பப்பட்ட இவர் பின்பு அது பத்து நாட்கள் வரை நீடிக்கப்பட்டதாகவும், இந்தச் சமயத்தில் கடந்த 11 ஆம் திகதி இவர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி காய மடைந்து அமெரிக்க வைத்திய தளமொன்றில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்ட போது உயிரிழந்ததாக தகவல் வெளியாகியுள்ளது. இவரது உறவினர் களுக்கு அவர்து நண்பர்கள் ஊடாகவே இந்தத் தகவல் தற்போது கிடைத்துள்ளது.

### மட்டு...

பட்ட மக்களின் துயர் துடைக்கவென கடந்த 18 ஆம் திகதி சுவிஸ் நாட்டிலிருந்து மட்டக்களப்பிற்கு வருகைதந்த எமது தமிழ் மண்ணின் மைந்தரான எஸ்.கே.ரீ நாதன் என்பவர் தற்காலிக வீடுகள் அமைப் பதற்கான உபகரணங்களையும் அத்தியாவசியப் பொருட்களையும் மட்டக்களப்பு தமிழர் புனர்வாழ்வுக்க ழகத்தினரிடம் வழங்கியுள்ளார்.

குறிப்பாக கூரை விரிப்புகள், மரந்தடிகள் மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் என்பன உட்பட ஒன்பது பார ஊர்திகளில் ஏற்றிவந்து தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினது மட்டக்களப்பு அலுவலகத்தில் ஒப்படைத் துள்ளார். இந்தியாவில் கொள்வனவு செய்யப்பட்டு ஒப்படைக்கப்பட்டுள்ள இந்த மனிதாபிமான உதவி யானது எமது இரண்டாம் கட்ட துரித புனர்வாழ்வு அபிவிருத்தி வேலைத்திட்டச் செயற்பாடுகளை மென்மேலும் ஊக்கப்படுத்தியுள்ளதென்பது குறிப்பிடத் தக்கது.

நாதன் அவர்கள் தான் கொண்டுவந்து ஒப்படைத்த வீட்டு உபகரணங்களைக் கொண்டு எவ்வாறு வீட்டினை அமைப்பது என்று விளக்கப்படுத்தியதுடன் முதலாவது வீடு ஒன்றினை அமைக்கும் முயற்சியிலும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத் தொண்டர்களுடன் ஈடுபட்டுள்ளார்.

வாழ்வில் ஒவ்வொரு மனிதர்களும் சுபீட்சமாகவும், சுதந்திரமாகவும் வாழவே விரும்புகின்றனர். அந்த வகையில் சுனாமிப்பேரலையினால் ஏற்பட்ட பெரும் துன்பகரமான வாழ்வில் தாங்களும் ஒருவராகப் பங்கேற்று இன்று பூநொச்சிமுனை முஸ்லிம் பிரதேசத் தில் மட்டக்களப்பு தமிழர் புனர்வாழ்வுக் கழகம் அமைத்துவரும் தற்காலிக கொட்டகைகளை சுவிஸ் நாட்டு தமிழர் புனர்வாழ்வுக் கழகம் உறுப்பினர்கள் 17 பேரைக் கொண்ட குழுவினரும் ஏனைய சிலரும் இரவு பகல் என்று பாராது தங்களது சொந்தச் செலவில் இங்கு தங்கிநின்று பாதிக்கப்பட்ட எமது மக்களுக்காக ஒன்றிணைந்து பணியாற்றிக் கொண்டிருப்பது எமக்கு உற்சாகத்தைத் தருகின்றது. இவ்வாறு தூரநோக்கோடு சேவையாற்றிவரும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்துடன் தாய் மண்ணின் உறவுகளுக்காக் கைகொடுத்துப் பணிபுரியும் சுவிஸ்நாட்டில் புலம் பெயர்ந்துவாழும் தமிழ் மக்களி னதும், சுவிஸ்நாட்டுப் பிரஜைகளினதும் உதவிக் கர்ங்கள் என்றும் நிலைத்திருக்க வேண்டுமென்பதே தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினது எதிர்பார்ப்பாகும்.

### சுனாமி...

னரும் ஒரு உடன்பாட்டிற்கு வருவார்களாயின் பாதிப்படைந்தவர்கள் நன்மை அடைவதற்கு வாய்ப் புண்டு. இது தொடர்பாக இன்று தமிழ்ச் செல்வனுடன் கலந்துரையாடியதுடன் இன்றிரவும் இரண்டு நாட் களிலும் அரசாங்கத்துடனும் ஏனையோருடனும் கலந்து ரையாடவுள்ளேன் என்றார்.

### இன்னுமொரு...

எமது அடுத்த கட்டத்திட்டமாக இருந்தது.

ஆனால் அந்தச் சமாதான நடவடிக்கைகளை இயன்றளவும் தொடங்க முடியாமலிருக்கின்றது. மேலும் போர் நிறுத்த ஒப்பந்தத்திற்கும் காலத்தில் நிலவி வருகின்ற போர் நிறுத்தச் சூழலுக்கும் பங்கம் ஏற்படுகின்ற நிலை இன்று உருவாகி இருக்கின்றது.

சில கட்சிகள் நாடு மீண்டும் யுத்தத்திற்குத் திரும்பு வதை விரும்புகின்றன ஆனால் மற்றொரு யுத்தத்தை எதிர் கொள்ளும் சக்தி இந்தத் தேசத்திற்கு இல்லை அப்படி ஒரு யுத்தம் வருமானால் நாம் அனைவருமே அதனால் அழிக்கப்படுவோம்:

ஆகவே போர் நிறுத்த ஒப்பந்தத்தை பாதுகாக்கும் முகமாக போர் நிறுத்தச் சூழல் தொடர்ந்தும் இருக்க வேண்டும் என்பதற்காக ஒன்றுபட்ட இலங்கை தேசத் தில் நிலைத்திருக்கக் கூடிய சமாதானத்தை உருவாக்கு வதற்காக அனைத்துச் சமூகத்தினராலும் ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒரு சமாதானத்தை உருவாக்கு வதற்காக நாம் அனைவரும் ஒன்று கூடவேண்டும் என்று அவர் கூறினார்.

### வடமராட்சி...

கலந்து கொண்டார். சுனாமிப்பேரலை அனர்த்தம் காரணமாகப் பாதிக்கப்பட்ட மக்களின் நிலைமைகள் தொடர்பாகவும் அடுத்த கட்ட நடவடிக்கைகள் பற்றியும் விபரமாகக் கேட்டறிந்துகொண்டார். இக் கலந்துரையாடலில் அவசரகால ஒருங்கிணைப்புச் செயலக இணைப்பாளர் சுடர்மணி தமிழர் புனர் வாழ்வுக்கழகத்தைச் சார்ந்த சுனாமிப்பேரலை அனர்த்த மீள் கட்டுமானப்பணிக்கான ஒருங்கிணைப்பாளர் சி. வின்சன், தமிழர் புனர்வாழ்வுக்கழக தொழில் நுட்ப ஆலோசகர்களில் ஒருவரான சுடர் ஆகியோர் கலந்து கொண்டு மக்களின் அழிவுகள் தொடர்பாகவும் அடுத்த கட்ட நடவடிக்கைகள் பற்றியும் விரிவாக எடுத்து விளக் கியிருந்தனர்.

இதனைத்தொடர்ந்து தாளையடி, உடுத்துறைப் பகுதிகளுக்கு நேரில் சென்று பாதிக்கப்பட்ட இடங்களைப் பார்வையிட்டார். இதனையடுத்து தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற தற்காலிக வீடுகளைக்கொண்ட குடியிருப்புப் பகுதிகளையும் பார்வையிட்டு, அங்குள்ள அடிப்படை வசதிகள் பற்றியும் கேட்டறிந்துகொண்டார். தற்காலிகக் குடியிருப்புக்களிலுள்ள மக்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ள அடிப்படை வசதிகள் குறித்தும் திருப்தி தெரிவித்தார்.

மார்ச் மாத முற்பகுதியில் 758 தற்காலிக வீடுகள் மக்களுக்குக் கையளிக்கப்பட இருப்பது பற்றியும், மூன்றாம் கட்டமாக தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தால் மேற்கொள்ளப்படவுள்ள நிரந்தரக் குடியிருப்புக்கள் தொடர்பான வேலைத்திட்டங்கள் பற்றியும் கேட்டறிந்து கொண்டார்.

## படுகொலைகளை...

இராணுவ நெருக்கடிகள் தொடர்பாக நாங்கள் விரிவாக விளக்கி இருக்கிறோம்.

இப்படியான செயற்பாடுகள் தொடர்வது யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை பாதிக்கின்ற செயற்பாடாக உள்ளதென்பதை விளக்கிக் கூறியிருக்கின்றோம்.

அத்தோடு இந்த சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட எங்களுடைய மக்களுக்கான அவசர மனிதாபிமான உதவிகளை மேற்கொள்வதற்கு சர்வதேச சமூகத்தினுடைய உதவி இங்கே திருப்பப்பட வேண்டும். அது பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். அதற்குப் பொதுவான ஒரு கட்டமைப்பு அமைக்கப்பட வேண்டுமென்பதையும் வலியுறுத்தியுள்ளோம்.

**கேள்வி:- மூன்றாண்டு யுத்தநிறுத்த ஒப்பந்தம் முடிவடைந்திருக்கிறது. இதற்கு சிக்கலான நிலைப்பாடுகள் எதுவும் ஏற்பட்டுள்ளதா?**

பதில்:- சிக்கலான ஒரு சூழ்நிலைக்குத்தான் தள்ளப்பட்டிருக்கின்றது. அண்மையில் ஆயுதப்படைகளால் நடத்தப்படுகின்ற யுத்தநிறுத்த மீறல்களால் எங்களுடைய மட்டு-அம்பாறை அரசியல்துறைப் பொறுப்பாளரும், மற்றும் போராளிகளும்,மாமனிதர் சந்திரநேரு ஐயா அவர்களும் கொல்லப்பட்ட நிகழ்வானது யுத்த நிறுத்த மீறலின் உச்சக் கட்ட நிலையாகத்தான் நாங்கள் கருதுகிறோம்.

இது மக்கள் மத்தியில் ஒரு அச்சத்தையும், பெரிய கொந்தளிப்பையும் ஏற்படுத்தியுள்ளது. ஆகவே இதுதான் இன்றைய நெருக்கடியான சூழ்நிலையாகவுள்ளது. இதனுடைய உச்சக்கட்டத்தை அவர்களுக்கு தெளிவாகக் கூறியிருக்கின்றோம்.

**கேள்வி:- போர்நிறுத்தத்தைத் தொடர்ந்து கடைப்பிடிப்பதற்கு நீங்கள் புதிய நடைமுறைகளை ஏதாவது முன்வைத்தீர்களா?**

பதில்:-புதிய யோசனைகள் ஒன்றும் கூற வேண்டிய தேவையில்லை. இரண்டு தரப்பும் ஏற்றுக்கொள்ளப்பட்டே- அரசாங்கம் முழு அளவில் ஏற்றுக்கொண்டே- இந்த யுத்தநிறுத்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திடப்பட்டது. அந்தவகையில் இந்த யுத்தநிறுத்த உடன்படிக்கையில் ஏற்றுக்கொண்ட விடயங்கள், நடைமுறைகளைத் தொடர்ந்தாலே இந்த யுத்த நிறுத்தச் சூழலை ஒழுங்காகப் பேணிக்கொள்ளலாம்.

ஆகவே இன்று ஏற்பட்டிருக்கின்ற நெருக்கடி படைத்தரப்பு ஆயுதக்குழுக்களைக் கொண்டு படைத்தரப்பும் இணைந்து விடுதலைப் புலிகள் அமைப்பின் மீதும், தேசப்பற்றாளர்கள் மீதும்,மக்கள் மீதும் ஒரு மறைமுக யுத்தத்தைத் தொடுத்துக் கொண்டு இருக்கிறார்கள். இது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். இது தொடரப்படுமாக இருந்தால் இந்த அமைதிச் சூழல், யுத்தநிறுத்த சூழல் என்பன எல்லாம் தகர்த்து எறியப்பட்டு விடும் என்ற ஆதங்கத்தை இன்றைக்கு நாங்கள் மிக ஆழமாக எடுத்துக் கூறியிருக்கின்றோம்.

**கேள்வி:- மூன்று வருடகால யுத்தநிறுத்த காலகட்டத்தின் போதும் ஒப்பந்தத்தில் கூறப்பட்ட விடயங்கள் எதுவும் பேணப்படாத பட்சத்தில் இனிமேல் இந்தப் போர்நிறுத்த ஒப்பந்தத்தை எவ்வாறு கையாளப் போகின்றீர்கள்?**

பதில்:- விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரையில் மிக உச்சப் பொறுமையைக் கடைப்பிடிக்கிறார்கள். எவ்வளவோ யுத்த நிறுத்த மீறல்கள்; எவ்வளவோ சீண்டும் காரியங்கள், படுகொலை முயற்சிகள் எல்லாம் மேற்கொள்ளப்பட்டது இருப்பினும் மிகுந்த பொறுமை காத்து முடிந்தளவு சர்வதேச சமூகத்தின் ஆதரவோடு இந்தச் சமாதான முயற்சிகளை முன்னெடுக்கலாம் என்கின்ற முயற்சியில் முழு அர்ப்பணிப்போடு ஈடுபடுகின்றார்கள் ஆகவே விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரையில், எங்களுடைய மக்களைப் பொறுத்தவரையில் எங்களுடைய தலைமைப் பீடத்தைப் பொறுத்தவரையில், நாஙகள் முடிந்தளவு அர்ப்பணிப்போடு எங்களுடைய பொறுமையை உச்ச அளவில் காட்டுகின்றோம். தொடர்ந்தும் இந்தப் பொறுமை எவ்வளவு தூரம் இதன் எல்லை இருக்குமென்பதை எங்களால் சொல்ல முடியாது. ஏனெனில் நடக்கிற சம்பவங்கள் இந்தப் பொறுமையையும் இந்த அர்ப்பணிப்பையும் தகர்க்கும் வகையில் அதைச் சீர்குலைக்கும் வகையிலுள்ளது.

**கேள்வி:-போர்நிறுத்த ஒப்பந்தக் சரத்துக்களைச் சரியான முறையில் வழிநடத்துவதற்கு அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் நீங்கள் சர்வதேசத்தினூடாக அழுத்தங்களைக் கொடுத்தீர்கள். அந்த முயற்சி இதுவரைக்கும் எதிர்பார்த்தளவு வெற்றியையும் கொடுக்கவில்லை. இனிமேல் நீங்கள் ஏதேனும் புதிய முறையான யுக்திகளைக் கையாளப்போகின்றீர்களா?**

பதில்:- எங்களை பொறுத்த வரையில் நாங்கள் தொடர்ந்து சர்வதேச சமூகத்திற்கு எமது நிலைப்பாட்டை தெளி வாக்கிக் கொண்டு வருகின்றோம்.சர்வதேச சமூகத்திற்கு இன்றைய சூழ்நிலை களை நாங்கள் தெளிவாக்குகின்ற முயற்சியில் மிக ஈடுபாட்டோடு நாங்கள் செயற்படுத்தி வருகின்றோம். எதிர்காலத்தில் இது சம்பந்தமான கடுமையான அழுத்தங்களை நாங்கள் சர்வதேச மக்களுக்கு கொடுக்க இருக்கின்றோம். எனவே தமிழ் மக்களோ எங்களது தலைமைப்பீடமோ சிறிலங்கா அரசாங்கம் ஒரு மறைமுகப் போரை எங்கள் மீது திணித்துக்கொண்டிருக்கும் பொழுது நாங்கள் தொடர்ந்தும் அமைதிகாத்துக் கொண்டிருக்க முடியாது. இந்த சூழ்நிலை இன்னும் ஆணித்தரமாகவும் உறுதியாகவும் பார்க்க வேண்டிய சூழலும் உருவாகியிருக்கின்றது.

**கேள்வி:-சுனாமி நிவாரண உதவிகள் வழங்குவது தொடர்பாக ஒரு பொதுக்கட்டமைப்பை உருவாக்கும் நிலைமைகள் எப்படி இருக்கின்றது.**

ஒன்றரை மாதம் கடந்த நிலையிலும் சர்வதேச உதவிகளைத்திருப்பி எங்களுடைய மக்களுக்கான மனிதாபிமான மீள்கட்டுமானப் பணிகள் • எதையும் மேற்கொள்ள முடியாத நிலைதான் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. ஆகவே இதுவும் பாதிக்கப்பட்ட பெரும் மனிதாபிமான நெருக்கடியை சந்தித்திருக்கின்ற எங்கள் மக்கள் மத்தியில் பாரிய விரக்தியைக் ஏற்படுத்திக்கொண்டிருக்கின்றது.ஆகவே இதற்கும் விரைவில் முடிவு காணப்பட வேண்டும். நோர்வே அனுசரணையாளர்கள் என்ற வகையில் சர்வதேச சமூகம் இதில் அதிக கவனமெடுக்க வேண்டும் என்பதையும் இன்று நாங்கள் ஆணித்தரமாக வலியுறுத்தியிருக்கின்றோம். எனவே நோர்வே அது சம்பந்தமாக கூடிய கரிசனை எடுப்பதாக எங்களுக்கு உறுதி அளித்துள்ளனர்.

**கேள்வி:- நீங்கள் விரைவில் ஐரோப்பிய நாடுகளுக்குச் செல்வதாக கூறப்படுகிறது. இது தொடர்பான உங்கள் கருத்து என்ன?**

பதில்:-விரைவில் நாங்கள் ஐரோப்பிய சமூகத்துடன் உரையாட வேண்டியிருக்கின்றது. எமது மக்களுடைய மனிதாபிமான தேவைகள், மனிதாபிமான பிரச்சினைகள், இங்குள்ள சூழ்நிலைகள் சம்பந்தமாகவும் குறிப்பாக சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான சர்வதேச உதவிகளைப் பெற்றுக் கொள்ளும் முயற்சிகளிலும் நாங்கள் ஈடுபட்டிருகின்றோம்.

**கேள்வி:- நீங்கள் கடந்தவாரம் தென்தமிழீழம் சென்றிருந்தீர்கள். அந்த விஜயம் தொடர்பாக கூறவிரும்புவதென்ன?**

பதில்:- எமது தென் தமிழீழத்திற்கான பயணம் பிரயோசனமாக அமைந்தது. எமது தலைவரின் விசேட பணிப்பிற்கிணங்கவே நாம் தென்தமிழீழத்திற்குச் சென்றிருந்தோம். கௌசல்யனின் இழப்பினாலும், இப்படியான படுகொலைகளினாலும் மிகவும் கொந்தளிப்பு ஏற்பட்டிருந்தவேளை மக்களுக்கு ஆறுதல் கூறும் முகமாகவும், சுனாமியால் எமது மக்களுக்கு ஏற்பட்டிருக்கின்ற பாதிப்புக்களுக்கு தீர்வுகாணக்கூடியமுயற்சிகளையும் நாம் எடுக்க வேண்டிய தேவை இருந்தது. புதிய நிர்வாகங்களையும் ஒழுங்குபடுத்த வேண்டிய தேவை இருந்தது. அங்கு மக்களை நாங்கள் சந்தித்ததும் மக்களுக்கு ஆறுதலைக் கொடுத்து மக்கள் மத்தியில் நம்பிக்கையைக் கட்டியெழுப்பவும் முயற்சிகளை மேற்கொண்டிருந்தோம். இவ்வாறான எமது செயற்பாடுகள் வரவேற்கப்பட்டன. குறிப்பாக நாம் முஸ்லிம் சகோதரர்களைச் சந்தித்திருந்தோம். அங்குள்ள பிரச்சினைகள் தொடர்பாகவும் நாங்கள் அவர்களுடன் கலந்துரையாடி எமது தலைமைப் பீடத்தின் கவனத்திற்குக் கொண்டுவந்து எதிர் காலத்தில் முன்னெடுக்கவேண்டிய வேலைத் திட்டங்களுக்கான பல தகவல்களையும் அங்குள்ள நிலைப்பாடுகளையும் அறிந்து வருவதற்கு எமது இந்தப் பயணம் சிறப்பாக அமைந்தன.

**கேள்வி:- கிழக்கில் நடந்துவரும் படுகொலைகளை நிறுத்துவது தொடர்பான செயற்பாடுகளில் உங்களது விஜயம் பயன்தரக் கூடியவாறு அமைந்திருந்ததா?**

பதில்:-எங்களுடைய பயணமென்பது அங்குள்ள நிலைமைகளை அறிவதற்கானது. ஆகவே நாம் அந்த நிலைமைகளை அறிந்து சம்பந்தப்பட்டவர்களுக்கு அந்த நிலைப்பாடுகளைத் தெரிவிக்க இப்பயணம் மிக ஆக்கபூர்வமாக அமைந்தது.

**கேள்வி:- சுனாமிக் கட்டமைப்பை உருவாக்குவதில் அரசாங்கத்திற்கும் உங்களுக்குமிடையில் என்னென்ன முரண்பாடுகள் இருக்கின்றன.**

பதில்:- பல விடையங்களில் முரண்பாடுகள் உள்ளன. ஆகவே அந்த விடையங்கள் தொடர்பாக நோர்வேத்தரப்பிற்கு நாங்கள் தெளிவாக்கியிருக்கின்றோம். அதற்கான தீர்வு விரைவில் கிடைக்குமாகவிருந்தால் விரைவாக அவ்வாறான கட்டமைப்பை உருவாக்க முடியும்.

**கேள்வி:- சுனாமி கட்டமைப்புத் தொடர்பாக அரசிடமிருந்து சரியான பதில்வரமுன் நீங்கள் வெளிநாட்டுக்குப் பயணிப்பதால் பயன் ஏதும் உண்டா?**

பதில்:- நாங்கள் அரசாங்கத்திடம் பேசித் தீர்வு காணும்வரை நாம் பொறுத்திருக்க முடியாது.இன்றைய சுனாமி அனர்த்தத்தால் சர்வதேச சமூகம் விரைந்து உதவியளிக்க முன்வந்துகொண்டிருக்கின்ற சூழலில்தான் நாங்கள் எமது மக்களின் தேவைகளைப் பற்றி வலியுறுத்துவது பொருத்தமாக இருக்கும். காலம்பிந்திச் செல்வதால் சர்வதேச உதவிகளை எமது பகுதிகளுக்குத் திருப்புவதென்பது அர்த்தமற்ற தாகிப்போய் விடும். அரசாங்கத்துடனான பேச்சுக்கள் ஒரு புறம் நடக்க சர்வதேசத்திற்குக்காலம் பிந்தாது சொல்ல வேண்டிய கருத்துக்களை எடுத்துச் சொல்லவேண்டியுள்ளது. இதற்காகவே நாம் வெளிநாடு செல்கின்றோம்.

**கேள்வி :- யாழ்ப்பாணத்தில் சுனாமி நிவாரணப் பணிக்காக அமைச்சர்கள் மட்டத்திலானவர்கள் நியமிக்கப்படுவதாக கூறப்பட்டிருக்கிறதே. இது பற்றிய உங்கள் கருத்தென்ன?**

எங்களுடைய தாயகப்பிரதேசத்தில் எந்த அபிவிருத்தி வேலைகளானாலும், மனிதாபிமான கட்டுமான பணிகளாயினும் அனைத்தையும் முன்னெடுப்பதற்கு நாங்கள் ஒருகட்டமைப்பை நிறுவும் ஆலோசனை கொடுத்துள்ளோம். இவற்றை அரசாங்கம் புறம்தள்ளி இவ்வாறான முயற்சிகளை எடுக்குமேயானால் எமது முயற்சிகள் பலவீனப்பட்டுவிடும். அது பலவீனப்படுமானால் எதிர்காலத்தில் என்ன நடக்குமென்பதை அவர்களே ஊகித்துக்கொள்வது பொருத்தமானதாக இருக்கும்.

**கேள்வி:-மூன்று வருட யுத்தநிறுத்தம் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பிற்கு எவ்வாறான சாதகமான அம்சங்களை ஏற்படுத்துகின்றது அவ்வாறில்லையாயின் விடுதலைப்புலிகளுக்கெதிரான அமைப்புக்கள் உதாரணமாக கருணா போன்ற அமைப்புக்கள் தோன்றி இவர்கள் செயற்படுவதற்கு வாய்ப்பளித்திருக்கின்றதென நினைக்கின்றீர்களா? இன்னும் எவ்வளவு காலத்திற்கு இந்த யுத்தநிறுத்தத்தைப் பேண முடியும்?**

பதில்:-இந்த யுத்தநிறுத்த உடன்படிக்கை புலிகளுக்கு சாதகமாக்குவதற்காக உருவாக்கப்பட்டவில்லை. இது முற்றுமுழுதாக போர் திணிக்கப்பட்ட இந்த தேசத்தின் விடுதலையையும் மக்களின் இயல்பு வாழ்க்கையையும் தான் இந்த யுத்த நிறுத்த உடன்படிக்கையின் அடிப்படை விடயமாக உள்ளது. ஆகவே எமது மக்கள் யுத்தத்தால் இடம் பெயர்க்கப்பட்டதும், யுத்தத்தால் எமது மக்களின் அடிப்படை கட்டுமானங்கள் சிதைக்கப்பட்டதும் இது போன்ற பெரும் அழிவுகளையும், அவலங்களையும் மனிதாபிமான நெருக்கடியையும் சந்தித்து நிற்கின்ற எமது மக்களுக்கு ஆறுதலைக் கொடுத்து அவர்களின் வாழ்க்கையில் ஓர் இயல்பு நிலையை தோற்றுவிப்பதும் தான் இந்த யுத்தநிறுத்ததினுடைய அடிப்படை அம்சம். ஆனால் அவை எதுவுமே நிறைவேற்றப்படாதது இந்த மூன்று வருடகால யுத்த நிறுத்தத்தில் ஏற்பட்டுள்ள பெரும் பின்னடைவாகவே நாங்கள் பார்க்கின்றோம் ஆகவே எமது மக்களுக்கு நன்மையளிக்கக்கூடிய விடயங்கள் அல்லது ஏற்றுக் கொள்ளப்பட்ட விடயங்கள் நடைமுறைப் படுத்தப்படவேண்டும் அந்த விடையங்கள் எதுவுமே நடைமுறைப்படுத்தாதது தான் இந்த மூன்று வருடகாலயுத்தநிறுத்த உடன்படிக்கைக்குப் பின்னால் மக்கள் மத்தியில் விரக்தியும் வெறுப்பும் நம்பிக்கையீனங்களும் அதிகரித்து இன்று மூன்று வருடத்திற்கு பின் தமது நம்பிக்கையீனத்தை வெளிப்படுத்துகின்ற வெகுசன போராட்டங்களையும் தமது கருத்துக்களையும் இப்போது வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அடுத்ததாக இவ் யுத்தநிறுத்த ஒப்பந்தத்தின் மிக முக்கியமான அம்சம் இருதரப்பும் யுத்தநிறுத்தத்தை மேற்கொண்டாலும் அந்த இரு தரப்பும் யுத்தநிறுத்தத்தைக் கடைப்பிடித்து சீராக முன்கொண்டு சென்றாலும் கடந்த காலங்களில் சிறிலங்காப் படைத்தரப்பு ஆயுதக்குழுக்களை வைத்துக்கொண்டு மக்கள் மீது ஒரு மறைமுக யுத்தத்தை மேற்கொண்டு வந்த யதார்த்தத்தின் அடிப்படையில் தான் நாங்கள் இந்த யுத்தநிறுத்த உடன்படிக்கையில் மிக முக்கியமாக வலியுறுத்தி இருதரப்பும் இணக்கம் காணப்பட்ட விடயம். படைத்தரப்போடு இயங்குகின்ற ஆயுதக் குழுக்கள் எமது தாயகப் பகுதியிலிருந்து வெளியேற்றப்பட வேண்டும். அவர்களின் ஆயுதங்கள் களையப்பட வேண்டும் என்பது இந்த சரத்திலேயே ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயம். இந்த புதிய அரசாங்கம் பதவியேற்ற பின்பு புதிய ஆயுதக்குழுக்கள் உருவாக்கப்பட்டு இன்று படைத்தரப்போடு நின்று எங்கள் மீது ஒரு மறைமுக யுத்தத்தைத் தொடுத்துக்கொண் டிருக்கிறார்கள். இது இந்த யுத்தநிறுத்த உடன்படிக்கையையே ஒரு கேள்விக்குறியாக்கியிருக்கின்றது. இந்த யுத்தநிறுத்த உடன்படிக்கையில் சேர்க்கப்பட்ட இந்த சரத்தைப் படைத்தரப்போ சிறிலங்கா அரசோ அனுசரித்து போகாவிட்டால் ஒரு கேள்விக்குறியான விடயமாக ஆக்கப்படுமென்றே நான் நம்புகிறேன்.

இவற்றைவிட இன்று பேசப்பட்ட விடயங்களில் முக்கியமானது தென்தமிழீழத்திலே நடந்த இந்த படுகொலையை சிறிலங்கா அரசாங்கமும் கண்டித்திருக்கின்றது. இதனை ஒரு நகைப்பிற்கிடமான தொன்றாகவே நாங்கள் பார்க்கின்றோம் ஏனெனில் படைத்தரப்பினூடைய முழு ஈடுபாட்டோடு தான் அந்த படுகொலை நடந்திருக்கின்றது. இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் இராணுவத்தினரின் படை முகாம்களும் காவலரண்களும் இருக்கின்ற பகுதியில் தான் இப்படுகொலைகள் நடந்திருக்கின்றன. இதற்கு முழுப் பொறுப்பையும் சிறிலங்கா படைத்தரப்பும் அரசாங்கமுமே ஏற்கவேண்டும். மறை முக யுத்த மொன்றையும் படு கொலைகளையும் செய்து கொண்டு கண்டனங்களை தெரிவிப்பதால் மட்டும் அவர்கள் இந்தக் குற்றச்சாட்டிலிருந்தும் நேரடியான இந்தப் படுகொலை முயற்சிகளிலிருந்தும் தப்பிக்கொள்ள முடியாது. ஆகவே அதை நாங்கள் இன்று தெளிவாக்கியிருக்கின்றோம் எங்களுடைய கட்டுப்பாட்டுப்பிரதேசங்களை பொறுத்தவரையில் இவ்வாறான யுத்தநிறுத்தத்திற்கு சவால் விடுகின்ற எந்த செயற் பாடுகளும் இங்கு அனுமதிக்கப்பட வில்லை நாம் அதை முழுக் கட்டுப்பாட்டுக்குள் வைத்துள்ளோம். இராணுவம் காவல்துறை என அனைத்தும் சோர்ந்து இயங்குகின்ற பகுதிகளுக்குள் ஆயுதக் குழுக்களின் செயற்பாடு என கூறிக் கொண்டு அவர்கள் தப்பிக் கொள்ள முடியாது. இது முற்று முழுதாக படைத்தரப்பின் பொறுப்பாகத்தான் நாம் பார்க்கின்றோம். அவர்களால் இவற்றை கட்டுப்படுத்த முடியாவிட்டால் இதிலிருந்து வெளியே எமது மக்களை நிம்மதியாக அவர்கள் வாழ விட வேண்டும் யுத்த நிறுத்தத் திற்கும் சவாலாக இந்தச் சம்பவங்கள் நடக்கின்றது. இந்த சூழ்நிலையை குழப்புகின்ற நோக்கோடு தான் அரசும் படைத்தரப்பும் செயற்படுகின்றதோ என்ற சந்தேகத்தை இன்று அனைத்து மக்கள் மத்தியிலும் கிளப்பப்பட்டுள்ளது. அத்தோடு இந்தப் படுகொலை முயற்சியை ஐ.நா. செயலாளர் நாயகம் கண்டித்திருந்தார். இக்கண்டனத்திற்கு கூட சிறிலங்கா அரசாங்கம் கண்டனம் தெரிவித்திருந்தது. எனவே இவற்றுக்கு யார் பொறுப்பென்பதை இந்த நிலைப்பாட்டினூடாக மக்களுக்கு தெளிவு படுத்தியிருக்கின்றது.

(ச,கு)


**அஞ்சடி வானில் இனி ஆங்கில வெள்ளம்**

**திருவையாறு கோவிந்தன் கடைச்சந்தியருகே இயங்கி வந்த**

**இங்லிஷ் வேர்க்ஷொப்**

**இன்றிலிருந்து அஞ்சடிவான் அருகே வருகிறது**

A.9 சாலையிலிருந்து ஒரு மைல்தூரம் மட்டுமே

புதிய பிரிவுகள் -
சிறுவர்களுக்கும்,
வளர்ந்தோருக்கும்,
வேலை செய்வோருக்குமான
புதிய பிரிவுகள் விரைவில் தொடங்கும்.

பதிவுகள்இன்றிலிருந்து மேற்கொள்ளப்படும். (சி-11450)


இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 23ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது